உ
ஓம் விநாயகநம

# சந்திரதீபம்

## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது.

இதழ் 2 சித்தார்த்தி வருஷம் ஆடி மாதம் 25ம்திகதி வெள்ளிக்கிழமை [10-‑-1979] சுடர் 15

RECEIVED
1979-8-31
PERIODICALS
DIVISION
UNIVERSITY ... LIBRARY

# அருள் நிறைந்த தலங்களை வழிபடல் ஓர் தவமாகும்.

**அல்லல் தருவது பிறவி. அதன் கொடுமையைத் தவத்தால் நீக்கலாம். அருள் நிறைந்த தலங்களைத் தொழுதிடும் புண்ணியம் தவத்தின் பலனைத்தரும்.**

## கோவிலில் எப்படி அருள் வரும்?

ஆதியும் அந்தமும் அறிதற்கரிய சோதியாகி நின்றருளும் சிவன் அமர்ந்த திருக் கோவிலை தொழுதல் தான் தவம் செய்தலாகும் எனதிருஞான சம்பந்தப் பெருமான் அருள் செய்கின்றார்.

உலக மக்களை நோக்கி நீவிர் உலக வாழ்வில் ஏற்படும் சங்கடங்களாய பிணி நோய் சஞ்சலம் மரணம் இவை நீங்கத் தவம் செய்ய விரும்பினால் நீவிர் அருள் மிகுந்த இந்த தலத்தை தொழு மின்கள் என்கின்றார். ஞானசம் ந்தர் கோவிலை வழிபாட்டிற் குரிய இடமாகக் கருதினாரன்றி வேறு எதற்கும் உரிய இடமாகக் கருதவில்லை என்பதை எடுத்துக்காட்ட அவர் திருத்தூங்கானை மாடம் என்னும் சிவதலத்தின் மேல் தொழுது பாடியருளிய பதிகத்தை உங்கட்கு இச்சுடரில் இதன் கீழாகத் தருகின்றோம்.

ஆதலினாலே தான் நாம் கோவிலை ஓர் கூத்து மேடையாக்காதீர்; ஆகம நெறிகளைப் புறக்கணியாதீர்; வேலி பயிரை மேய்வது போல் திருப்பணிச் சபையாரும் நிர்வாகிகளும் எஜமான்களும் கோவிலை உமது தேனீர் கடை போல் எண்ணாதீர். தேனீர் கடையில் பழம் தோசை வடை மறுநாளும் அவை புதிது என்று விற்பது போலத் தான் பணம் பெருக்கும் நோக்கமாக பல பல பொய்களைச் சொல்லி அரசியல் சட்டங்களின் நிழலில் பாதுகாப்பாக நின்று பாங்கிலாத வகை உம்படியை வலுவாக்குகின்றீர் எனச் சொல்லி இவை தவறு இறை சந்நிதியில் கோபுரம் பெரிதல்ல சித்திரத் தேர் பெரிதல்ல பொன்னான மண்டபம் பெரிதல்ல ஒழுங்குதான் பெரிது எனச் சொன்னோம்! கள்ளக்கடத்தல் மூலம் அல்லது இருட்டுச் சந்தை மூலம் அல்லது அரசாங்க கொன்றாக் மூலம் பெருக்கிக் கொண்ட பணத்தில் பெரும் பெரும் கோபுரம் சித்திரத் தேர் ஒன்றல்ல ஒவ்வொரு வருடத்திற்கும் ஒவ்வொன்று கட்டி முடிக்கலாம். ஆனால் ஒருவர் தன்னிடத்து ஒழுங்கை வளர்ப்பது என்றால் அது இயலாத காரியம்! அருள் பெருகுவதற்கு ஒழுக்கமே முக்கியம்.

## வழிபாட்டு இடத்தில் ஒழுக்கமே அருள்.

ஒரு நரள் யோக சுவாமிகள் சிவதொண்டன் நிலைய நிர்வாகி ஒருவரை நோக்கி நீயும் முதலாளியல்ல நானும் முதலாளி அல்ல ஒழுங்குதான் முதலாளி என்றார். அதனை வலிஉறுத்தி வள்ளுவரும் ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பபபடும் என சிறப பித்தார். யோகசுவாமிகள் அடியேனை நோக்கி ஒழுங்கு தான் காணும் பெரிது! ஒழுங்காய் நடவும் அதுதான் என்றும் உறுதுணை என்பார்.

அதுவன்றி இன்னு மொரு வாக்கியம் சொல்வார். அதுயாதெனில் மனிதப் பிறவியில் பெரும் ஆபத்தை வாழ்வில் தேடித்தருவது ஒரு கோவில் தர்மகர்த்தா வாகவும் ஓர் மடாதிபதியாகவும் பிறப்பது என்பார். ஏனெனில் இவர்கள் இருவருடைய நிலையிலும் ஒருக் காலுமே உயர்ந்த நீதிக்கு வழிப்படும் செயல் வராது என்பார். சுவாமிகள் சொல்லிய உண்மைகள் இன்று நடந்து வருவதை கண்ணால் காணுகின்றோம். ஆனால் இன்று நடப்பது என்ன?

ஒழுங்கிலாத நடத்தையும் நீதியற்ற பண வசூலிப்பும் ஆங்கார அடக்கு முறைகளும் என்றுமே கோயிலை அருள் வழியில் சிறப்பியாது! பதில் அக் கோயிலை வணங்குவாரை வன்கண்ணராகவும் நீதியிலாதவராகவும் மாற்றிவிடும். இதனாலே வணங்குவார் உயர்கதிக்கு வழிதேடிப் போக முடியாத நிலை உருவாகும்!

## அந்தணர்க்கு திரு என்றால் யாது?

திருநாவுக்கரசர் ஒரு தேவாரத்து "உலகிற் கெல்லாம் திருஉடைய அந்தணாளர்" எனச் சொல்கின்றார். இந்த திரு அந்தணர்க்கு எப்படி வரும்? ஒரு நாளைக்கு அறுபது பொய் சொல்ல; சண்டித்தனம் செய்ய; கத்தி எடுக்க பொல்லு எடுக்க மது அருந்த பிறன்மனைவியை விரும்ப அரசியலில் ஈடுபட மது மாமிசம் புசிப்பவரிடம் ஏவல் செய்ய காவாலிகளுடன் கூட்டாளியாத்திரிய கோயில் தொண்டில் பொய் சொல்லி ஏமாற்றிப் பணம் பறிக்க கோயில் தொண்டை ........ செய்யாது ஏமாற்றம் செய்ய; இப்படிப் பலதையும் செய்தால் அருளின் திரு வருமா?

இது மட்டுமன்றி பிராமணர்கள் தமக்குரிய நெறிகளைப் பேண மாட்டாது வேறு வேறு செயல்களைப் புரிந்து வேதாகம நெறிகளை வெறும் கேலிக் கூத்தாக்கி; தம் வயிற்றுப் பிழைப்பிற்காக்கி; சைவத்தின் திருவை அழித்தனர்.

யாழ்ப்பாண மக்களே பதில் தாருங்கள்? திரு என்றால் என்ன? ஐயருடைய கால் சட்டை சப்பாத்து மேல் சட்டை கார் ஸ்கூட்டர் கூலிங்கிளாஸ் அம்மாவினது கிட்பாக் றிசிலெற் விநோத உடை சினிமாப் பாட்டு இவைகளோ! அல்லது எவரும் கண்ட போது வணங்கிக் கொள்ளும் படியான உத்தம நெறியின் வைதிக ஒழுக்கமோ? இவற்றை விளக்குங்கள்.

## திருவுடைய அந்தணர் எப்படி இருப்பார்?

திரு உடைய அந்தணர் தோற்றத்தில் ஒரு சாந்தி இருக்கும்! முகத்தில் ஒரு ஒளி இருக்கும்! தம்மை அல்லல் படுத்துவானின் அறியாமை நோக்கி வருந்தும் கருணையின்குறி முகத்தில் இருக்கும். கபடமிலாது தமது வேத நெறிக்குரிய எச்செயலையும் அன்பாகச் செய்வார். காசு தந்தவரையும் தராதவரையும் அன்புடன் நோக்குவார். காசு கூடக் கொடுப்பவரிடத்து பட்சமும் அல்லாதவரை சாபம் போடும் சிந்தையும் கொள்ளார்.

அடுத்து அவர் சைவத்தின் உயர்ந்த சீலங்களாய அன்பு அகிம்சை சத்தியம் தருமம் தவம் தியானம் முதல் நற்செயல்கள் நிறையப் பெற்றிருப்பார். இந்த ஒரு வகை அந்தணரால் தான் சிவன் அருளைப் பெறமுடியும்! ஏனைய துர் நடத்தை உடையோரால் சிவன் அருளைப் பெற முடியாது. அது ஏமாற்று! அது ஐ.ஆர்.சி ஒருவன் குளித்து திருநீற்றுக் குறி வைத்தது போலத்தான் இருக்கும்.

யாழ்ப்பாண மக்களே இந்த வகை திருவுடையஉத்தமமான ஓர் பிராமணரை நீங்கள் வைத்திருக்க முடியவில்லை என்பது உங்களது பாவத்தின் மிகுதியைக் காண்பிக்கின்றது. நீங்கள் புண்ணிய முடையவராக இருந்தால் உங்களுக்கு புண்ணிய வசமுடைய ஓர் அந்தணர் நிச்சயம் கிடைத்திருப்பார்.

## கோயில் பரிபாலகரும் அர்ச்சகரும் சைவ சீலம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

இன்று பிராமண சமுதாயம் திருவின்றிக் கெடுவதற்கு கோயிலைப் பரிபாலித்திடும் திருப்பணிச் சபையினரும் கோயில் தர்மகர்த்தாக்களும் ஒருகாலாக உள்ளனர்! இன்று யாழ்ப்பணக்குடா நாட்டில் உள்ள கோயில் திருப்பணிச் சபை எஜமான்கள் தர்மகத்தாக்கள் எனப்படுவோர் சாதாரண மக்களை விட மிகவும் மோசமான துர் நடத்தை உடையவராக இருக்கின்றனர், இதையாரும் மறுக்க முடியாது. நான் அறிய எனது சுற்றுடலில் இருக்கும் பல கோயில்களில் பஞ்சமா பாதகங்களையும் கூசாமல் செய்ய வல்லவரே திருப்பணிச்சபையினராக உள்ளனர்.

அருகாமையில் உள்ள கோயில் ஒன்றின் எஜமான் கொழும்பில் இருக்கிறார். அவர் மது அருந்துபவர். அவர் தனது கோவில் ஒரு கந்தோர் எனநினைப்பவர். அவரால் நியமிக்கப்பட்ட ஒரு ஐயர் ஓர் காடைத்தனம் மிகுந்தவர், அவரது முதல் மனைவி தற்கொலை செய்து கொண்டவர். இப்பொழுது அவர் மக்கள் முதலாம் தர காடைப் பொடியளுடன் கூடிப் போறவாறவருடன் சண்டைசெய்யப் பார்க்கிறார். அவர்செய்யுறது எதனையும் சரி என ஆரும் ஏற்கவேணும். இல்லாவிட்டால் ஆபத்து.

ஆகவே இப்படியான ஒரு எஜமான் பரிபாலிப்ப அவரால் நியமித்த அந்தனர் ஓர் காவாலிக் கூட்டணியாக! கோயிலில் அருள் வருமோ? தயவு செய்து பதில் தாருங்கள். உண்மையில் முன்பு இக் கோயிலிற்குத் தினம் தோறும் பல மக்கள் கும்பிடச் செல்பவர், இப்பொழுது அது மிகு குறைவு,

எனது அருகாமையில் உள்ள கோவிலிலும் திருப்பணிச்சபையில் பெரும் பாலோர் நீதியற்ற வகை நடப்பவர். அவருக்கு வாய்த்த குருக்கள் கோயில் பாலைத்தான் காய்ச்சிக் குடிப்பவர். இந்தக் கோயிலில் முன் பெல்லாம் நல்ல புராணபடனம் பத்திமையான செயல் நடை பெற்றன. இப் பொழுது அவையின்றி சில திருப்பணிச்சபையின் புதல்வர் கூடி வேடிக்கை ........ சிரித்திடவும் காவாலித் திருவிழாச் செய்யவும் வாய்த்த இடமாக வந்து கொண்டது. இந்தக் கோயிலைக் கும்பிட மக்கள் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்கு பாத நெறியே கோவிலிற்குரியது

சைவம் சரியை கிரியை யோகம் ஞானம் எனும் நான்கு வகையாக முன்புள்ள பெரியோரால் வகுக்கப் பெற்றது. இந்த ஒழுக்கங்கள் ஒன்றின் பின் ஒன்ருக உயர்ந்து போவதாக வேதங்கள் சொல்வன.

சரியை இறைவனது திருக்கோயிலிலும் நம் இல்லத்திலும் செயல் படும் தூய தொண்டுகளாகும். அவை கூட்டுதல் கழுவுதல் மெழுகுதல் கோலமிடல் பூக் கொய்தல் மாலைகட்டல் சாத்தக் கொடுத்தல் தோத்திரம் செய்தல் செபஞ் செய்தல் மய் சொல்லல் கரவிலாத நடத்தை இவையாகும்.

கிரியை- மேற்சொல்லிய தொண்டுகளை முறையாகச் செய்து வந்து அதன் பயனுல ஓர் உத்தம குருவை அடைந்து அவர் அருள் வழியில் நின்று அவர் தமக்கு உபதேசித்த வழி சிவ பூசை செய்து: நித்திய ஓமாக்கினி வளர்த்து: அந்த அக்கினியைச் சிவமாகப் பாவித்து வணங்கி அதில் தேவர்கட்கு ஆகுதி செய்தல் இவையாகும்.

யோகம் - இவை இரண்டையும் ஒழுங்கு முறையாக கபடமின்றி பிரசார அவா இன்றி புகழ் பெருக்கும் எண்ணமின்றிச் செய்துவர அப்பால் தாமாக உலகில் சிவன் அருள் பெற வேண்டும் எனும் தாகம் தலைப்படும். இந்த தாகம் தலைப்பட பிரணயாமம் முதலிய செயல்கள் கைகூடிடும். இவ்வழியில் தலை நின்று ஒழுகி வந்தால் திருநடனச் சிலம் போசை கேட்கப்படும். அந்த மாசிலாத ஓசை கேட்டு அருள் வசத்தால் உயர்ந்து காண்டற்கரிய கடவுளைக் காணலாகும்.

ஞானம்- யோக நிலையின் முதிர்ச்யே ஞானம்- ஞானம் என்பது யோக நிலையால் உடம்பில் உள்ள மண் முதல் 96 தத்துங்களையும் கடந்து அப்பால் முதலும் முடிவுமிலாத தெய்வத் தலைமையால் என்றதாகும். இந்நிலை மிகு உயர்ந்தது. இந்த நிலையில் பெறப்படும் இன்பம் பேசற் கரியது. இன்பத்துள் இன்பம் செல்வத்துள் செல்வம்.

இது தான் சைவம், இதனை ஒழுங்கு முறையாகச் செய்யும் படி நாம் சந்திரதீபம் மூலம் தெரிவித்தோம். முதற்கண் சரியை நெறிகளை எடுத்துக் கொண்டு அதை யாதல் சரியாச் செய்கின்ருேமா? அதைச் சிந்தியாது நம் மீது கோபம் கொள்ளலாமா? உண்மையில் நமது தொண்டு கோவில்களில் விடும் தவறுகளை சுட்டிக் காண்பித்தலேயாகும். ஏன் அப்படி என்ருல் இனியும் பிழை நேராது பாது காக்கும் படியாகும். தவற்றைக் காண்பித்தவுடன் அதை உணர்ந்து திருந்துதல் தான் முறை! அதை விடுத்து அவை நடபெற வில்லை என செய்த தவற்றை மறைத்திட இன்னமும் பலபொய் சொல்லிப் பழியினைப் பெக்குவதா?

இன்று சைவ நெறியில் முதற்படியான சரியைக்குரிய நெறிகளை மக்கள் விரும்பாது பிரசாரம் என்றதை மட்டும் விரும்புவது எக்காரணம்? கோயில் சந்நிதியில் ஒழுங்கான முறையில் அதற்குரிய தொண்டைச் செய்யாது கோவிலிற்கு உரிய பால் பழம் முதலியவற்றைப் துஷ்பிரயோகம் செய்து. நடவாதன நடத்திவிட்டு ஒரு ஒலிபெருக்கி பிடித்து ஒரு பிரசங்கம் போதனை எதற்கு? உண்மை உணர என்ருல் கோயிலை ஏன் கட்டினேம்? திருவிழாச் செய்யவா? பாட்டுக் கச்சேரி வைக்கவா? மேடை போடவா? ஒலி பெருக்கிக் கோர்வை பூட்டவா? இந்தவகைகளான போலிப் பிரசார திருவிழா மனப்பாங்கை விடுத்து ஞானசம்பந்தர் காட்டிய ஒழிநெறியான சரியைமுதல் நான்குபாதங்களுமே கோவிலில் வேண்டப்படுவன.

## உண்மையான கோவிலில் மனத்தூய்மை தானுக ஏற்படும்.

சுந்தரமூர்த்தி சுவாயகள் அருள் உடைய கோயில் எல்லை மிதித்தாலே அங்கு தீங்கான மன எண்ணமும் தூய்மைப் படும் எனச் சொல்கின்ருர். இதனை நல்ல நினைப்பு ஒழிய நாள்களில் ஆர் உயிரைக் கொல்ல நினைந்தனவும் குற்றமும் அற்று ஒழிய திருவாரூர் எல்லை மிதிப்பது என்றுகொல்? எனவே வேதமொழியாம் தமிழ் பாடலால் தெரிவிக்கின்ருர். இன்று நமது யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள கோயிலை எடுத்துக் கொண்டால் கொலை செருப்பால் அடிபடுதல் சண்டையிடல் வாதாடல் கோயில் கும்பிடுவார்க்கு திருப்பணி செய்வார்க்கு பல முட்டுகள் இடைஞ்சல் செய்தல் நடைபெறுகின்றன. ஆதை பிரசாரகரோ அல்லது சமய நிறுவனங்களோ எக்காலமேனும் தவறு என்று சுட்டிக் காண்பிக்கவில்லையே! இப்படியான இடங்களை கோயிலை அருலால் சிறந்தன என்று சொல்லலாமா?

திருஞானசம்பந்தர் இன்று இருந்தால் எமது கோயிலின் நிலையைக் கண்டு ஒரு திருப்பதிகமேனும் இக்கோயில் மேல் பாடி இருப்பாரா? இதை யாரேனும் சிந்திப்பாரா ?

## ஆகமம் சொன்னவழி கோவிலை நடத்தாதவர் அந்தணரும்அல்ல! சைவரும் அல்ல!

ஆகமம் சொன்னவழி கோயிலை நடத்தினல் என்றும் அருள் பெருகும். ஆகமம் எதை வலிஉறுத்தியது? ஒன்று அர்ச்சகருடைய ஒழுக்கம்! இரண்டாவது பூசை ஒழுங்கு! அங்கு பூ நீர் விளக்கு இவை முதல் தொண்டும் தூய நைவேத்தியம் பட்டாடை உபசாரப் பொருள்களான சாமரை கொடி குடை ஆலவட்டம் மங்கல ஓசை இவைகளும் இன்னும் இவை போன்ற ஏனைய பொருள்களுமாகும்.

ஒலிபெருக்கி லயிற் அடித்தல் முதல் எந்த விதமான இயந்திர சாதனங்களும் பாவிக்கப் படாது என வலிஉறுத்தின! இவையாவும் அசட்டுப் பொருள் என முன்னுக விலக்கப்பட்டன. இப்படியான அபசாரப் பொருள் பாவித்து வழிபட்டால் கோவில் ஓர் வன்செயலான கொலை களவு சண்டை முதல் பாதகங்கள் பெருக்கும் இடமாகும் என சொல்லின, இதை யார் இன்று உணர்கிருர்?

## நிர்வாகம் தர்ம வழியில் அமையவேண்டும்.

கோயில் நிர்வாகங்களின் தூய்மையான தொண்டு மனப்பாமை உடையோர் பங்கு கொள்ள வேண்டும்! உதாரணமாக பற்றற்ற மகான்களே கோயில் பரிபாலனத்தை நடத்திடவழி காட்ட வேண்டும். கோவில் நிர்வாகம் எப்பொழுதும் அறம் உணர்ந்த பெரியோர் சொல்வதை ஏற்கவேண்டும். கோயில் நிர்வாகசபைகளில் பெண்கள் இருத்தல் தகாது! அப்படியான நிர்வாகங்களில் பெரும் சீர்கேடு பெருகும். திருக்குறள் இதற்கு சான்று! பற்றற்ற சிவனடியார் கூட்டமே முன்பு திருவாரூர் முதலிய அருள் உடைய தலங்களை வழி நடத்தினர் என பெரிய புராணம் தெரிவிக்கின்றது.

கோவில் தர்ம வழியில் நடைபெற வேண்டும் என ஆகமம் வலிஉறுத்துகின்றது. கோயில் கட்டுவதற்கு இன்னமுறையான வகையில் பொருள் தேடவேண்டும். கோயிலில் தருமம் அற்றவகை பொருள் தேடி அதாவது ரிக்கற்மூலம் படக்காட்சிமூலம் லொத்தர் மூலம் பொருள் சேகரிக்கப் படாது! அத்தகைய பிழையான வழிப் பொருள் தேடித் திருப்பணி செய்யப்படும் கோவில்களில் தூய அன்பு பெருகாது பதில் வன்செயல்கள் பெருகும் எனச் சொல்லின, யார் இதை இன்று கவனிப்பார்.

எமது கோவில் எல்லாம் வியாபாரக் கடைபோல விளங்குகின்றன. ரிக்கற்; உபயங்கட்கு குத்தகையில் காசு: இவையாவும் வாங்குவது வியாபார மனப்பான்மையைத் தூண்டி கோயில் மேல் பெறும் பணத்தை தவருன வழியில் கணக்கிடும் வழி வகைகளைப் பெருக்கி கோயிலில் சத்தியம் நிதார்த்தம் இவை இல்லாது செய்யும்.

உபயம் செய்வோர் தாம் தாம் சேகரித்துக் கொடுக்கும் பொருளைக் கொண்டு திருப்பூசை திருவிழா உபயம் செய்தலே நன்று.

தினம்தோறும் ஓர் சமயப் பத்திரிகை நடத்தினுலும் அதில் பிரசுரித்துது மிச்சமாகும் படி இங்குள்ள கோயில் பேரில் வாங்கும் காசும் அருச்சனை ரிக்கற்றும் துஸ்பிரயோகமாகின்றதற்குரிய செய்திகள் எம யாழ்பாண நாட்டில் உண்டு.

## சிவனது வடிவம் நீதி என்கின்றன வேதம்.

நீதி பலவும் தனது உருவமான கடவுள் சிவனது கோயில் இது என்று திருஞான சம்பந்தர் பாட அதைப் பற்றி கொஞ்ச மேனும் சிந்தியாது நீதியற்ற செயலைச் செய்தால் சிவன் அத்தலத்தில் இருப்பானே? அத்தலத்தைக் கும்பிடுதல் தவமாகுமா? நீதியற்ற வகை நடைபெறும் எந்தக் கோயிலையும் கும்பிடுதல்தவமாகாது என்பதை இனியாதல் உணர மாட்டீரோ.

நீதி உடைய கடவுள் கோயிலில் இருந்தால் அங்கு நீதி ஒழுக்கம் நிலவும்! நீதி ஒழுக்கம் கோவிலில் இல்லை என்ருல் அங்கு கடவுளும் இல்லை எனவே நாம் எண்ண வேண்டும். ஆதலின் இப்பதிகத்தை நன்கு ஓதி யாழ்ப்பாண மக்கள் யாவரும் கோவிலை ஓர் தருமவழி நிலையமாக; பணம் பறிக்கும் இடம் அல்லாவகையாக புண்ணியச் செய்கை நிறையும் இடமாக ஆக்க சிறிதாவது முயலுங்கள்!

திருச்சிற்றம்பலம்

ஒடுங்கும்பிணிபிறவி கேடென்றிவை யுடைத்தாயவாழ்க்கை யொழியத்தவம்
அடங்கும் மிடங்கருதி நின்றீரெல்லாம் அடிகளடிநிழற்கீ ழாளாம் வண்ணம்
கிடங்கும் மதிலுஞ் சுலாவியெங்குங் கெழுமனைகள் தோறும் மறையின்னெலி
தொடங்குங்கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே

நம்மைச் சாரும் நோய் பிறவித்துயரமான கேடுகள் என்ற இவைகள் உடைத்தாய வாழ்க்கை நீங்கிட வேண்டும் என்று தவம் செய்து நல் நிலைப்பட எண்ணி நின்றீர்கள் யாவரும் எம் குருபரன் சிவன் திருவடி நிழலின் கீழாக ஒதுங்கி அவர்க்கு ஆளாகும் வண்ணமாதல் நன்று. ஆதலின் அகழிக் கிடங்கும் மதிலும் சுற்றி எல்லா இடத்து இல்லங்கள் தோறும் வேதத்தின் ஒலிகள் தொடங்கி முழங்கிட விளங்கும் திருக்கடந்தை என்னும் பதியில் பெருங்கோயிலாக இருக்கும் திருத்தூங்கானை மாடம் என்னும் தலத்தைத் தொழுங்கள்:

பிறவியால் வரும் கேடு நீங்க தவம் செய்வீர் சிவன் திருவடிக்கு ஆளாவீராக. எம்பெருமான் இருக்கும் திருத்தூங்கானை மாடத்தைத் தொழுதல் உமக்கு ஒரு தவமேயாகும் என்றபடி. 1

பிணிநீர சாதல் பிறத்தலிவை பிரியப் பிரியாத பேரின்பத்தோ
டணிநீர மேலுலகம் எய்தலுறில் அறிமின் குறைவில்லை ஆனேறுடை
மணிநீல கண்டம்உடைய பிரான் மலைமகளுந்தானும் மகிழ்ந்துவாழும்
துணிநீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணி வாய்ப்பட்டு துயருற்று இறந்து பின்னர் பிறந்து இப்படியான இவைகள் நீங்கி என்றும் பிரியாத பேரின்பம் பொருந்தி அழகால் விளங்கும் மேல் உலகத்தை அடைய விரும்பின் நாம் சொல்வதை அறியுங்கள். அது தான் மேலான இப்பெருமையைப் பெறுதற்கு உமக்கு ஏதும் குறைவு வராது, எவ்வாறெனில் இடபங்களின் தலைமைப்பாடுடைய ஓர் இடபத்தை வாகனமாக உடைய பெருமான் அழகிய நீலகண்டம் உடையவன்; மலையரசன் புத்திரியும் தானும் கூடி மகிழ்ந்து வாழுகின்ற நீர் வளம் சிறந்து கொண்ட திருக்கடந்தையில் பெருங்கோயிலாக அமைந்து கொண்ட திருத் தூங்கானைமாடத்தைத் தொழுது கொள்ளுங்கள்.

பிறப்பு இறப்பு பிணி இவை தவிரும் பேரின்ப உலகை நீர் அடைய விரும்பின் அதற்குக் குறைவில்லை. நாம் சொல்லுதும் திருத் தூங்கானை மாடத்தைத் தொழுது போற்றுங்கள் அதனை அடையலாம் என்றபடி. 2

சாநாளும் வாழ்நாளுந் தோற்றமிவை சலிப்பாய வாழ்கை யொழியத்தவம்
ஆமாறறியா தலமந்துநீர் அயர்ந்துங் குறைவில்லை ஆனேறுடைப்
பூமாண் அலங்கல் இலங்குகொன்றை புனல்பொதிந்த புன்சடையினுன் உறையும்
தூமாண் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே.

சாகின்ற நாளும் வாழ்கின்ற நாளும் மீளப்பிறக்கின்ற நாளும் ஆக! இவையே வாழ்வின் வரலாருக உளது. இது பெரும் சலிப்புடையது. இந்தச் சலிப்பாய வாழ்க்கை ஒழிந்திடத் தவம் செய்ய வேண்டும். அது கை கூடும் வகை அறியாது துயருற்று நீர் அலமந்து ஏங்கி அயர்வு கொண்டு திரிந்தீர். உமக்குக் குறைவில்லை, நாம் சொல்வதைக் கேளுங்கள். இடபங்களின் பெரும் தலைமைப்பாடான இடபத்தைத் தனக்கு வாகன மாகக் கொண்டு பூக்களில் சிறந்த கொன்றை மாலையுடன் கங்கை நீர் சுமந்திருக்கும் புரி புன் சடையுடைய கடவுள் இருக்கும் தூய்மையின்மாட்சி உடைய கடந்தையில் பெருங் கோயிலாக விளங்கும் திருத்தூங்கானை மாடத்தை தொழுங்கள். 3

ஊன்றும் பிணிபிறவி கேடென்றிவை உடைத்தாயவாழ்க்கை யொழியத்தவம்
மான்று மனங்கருதி நின்றீரெல்லாம் மனம்திரிந்து மண்ணில்மயங்காது நீர்
மூன்றுமதிலெய்த மூவாச்சிலை முதல்வர்க் கிடம்போலும் முகில்தோய்கொடி
தோன்றுங்கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே.

ஓயாது பெருகும் பிணி பிறவி கேடு என்று இவை உடைத்தா வாழ்க்கை ஒழிந்திடத் தவம் சிறப்புடன் செய்யவேண்டும் எனமனதில் எண்ணி நிற்கும் நீங்கள் எல்லாரும் தவம் புரிய முற்பட்ட நேரம் வருகின்ற அல்லல் கண்டு மனம் மாறுப்பட்டு மண்ணில் நீங்கள் மயங்காது; மூன்று புரங்களையும் அம்பால் எய்த மூவாதவில் ஒன்று உடைய முல முதல்வனுய சிவனுக்கு இது ஒரு இடம் போலாகும். முகில் படிந்து தோயும் படியான கோபுர முடிகளின் மீது கொடிகள் தோன்றும் கடந்தை என்னும் ஊரில் பெரும் கோயிலாக வந்து அமைந்து கொண்ட திருத் தூங்கானை மாடம் என்னும் தலத்தை தொழுது கொள்ளுங்கள்.

தூங்கானை மாடம் சிவன் அருளால் கடந்தை என்னும் ஊரில் வந்தது. அதைத் தொழுவது தவமாவது என்கின்ருர். பிணி மூப்புச் சாக் காடு இவற்றின் பயம் பெரும் துயரம் தருவது. இவற்றை நீக்கி தலம் புரிவது என்ருல் அத்தகைய தவத்தை மேற் கொண்டிடற்கு பெரும் பெரும் இடஞ்சல் நேரும் போது மனம் சலிப்படைந்து மயங்கி இவ்வுலகில் அங்கிங் கென்று அவரிவரென்று வேதனை உறவேண்டிவரும் ஆனல் தூங்கானை மாடத் தமர்ந்த சிவக்கொழுந்தைத் தொழுதால் தொந்தரவு ஏதும் பெருகாது தவம் கைகூடும் என்றபடி. 4

மயல்தீர்மையில்லாத தோற்றம்மிவை மரணத்தொ டொத்தழியு மாறுதலால்
வியல்திரமேலுக மெய்தலுறின் மிக்கொன்றும் வேண்டா விமலனிடம்
உயர்திரவோங்கிய நாமங்களாலோவாது நாளும் அடிபரவல்செய்
துயர்தீர்கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே.

மயக்கம் தீர்ந்து கொள்ளாத எமது தோற்றம் இவை எவையும் மரணத்துடன் கூடி அழியும் வழியாக இருப்பதால் இந்த இயல்பான செயல் நீங்குவதற்கு இந்த உலகம் அல்லாத அருளின் தொடர்புடைய மேல் உலகத்தை அடைய விரும்பின் நீங்கள் அதற்காகச் சிரமப்பட்டு மேலாக ஒன்றும் செய்ய வேண்டாம். நாம் சொல்வதைக் கேளுங்கள் எம்பெருமான் சிவனது இருப்பிடமாகி; எமக்கு வரும் எத்தீங்கின் பெருக்கமும் தீரும்படி ஓங்கிய சிவநாமங்களால் ஓயாது நாளும் திருவடி போற்றுதல் செய்திடலால் துயர் யாவும் தீர்த்திட வல்ல தான கடந்தைப் பதியில் பெரும் கோயிலான தூங்கானை மாடத்தைச் சேர்ந்து கொள்ளுங்கள்.

எம் பிறவியில் நிறைவது மயக்கம். இது தீர்க்க முடியாத தொன்று. இப்பிறவி மரணத்துடன் முடியும் வழியாகவே என்றும் உள்ளது பிறந்தார் அல்லது தோற்ற மெடுத்த எவையும் இறப்பது தான் முடிவு. இந்த வகையான சங்கடத்தில் நின்றும் நீங்கிட மேல் உலகம் அடைய வேண்டும் என்ருல் வேறு ஒன்றும் மிதமிஞ்சித் செய்திட வேண்டாம். இறைவன் இருப்பிடமாய தூங்கானை மாடம் தொழுமின்களே என்கின்ருர். இதை ஊன்றிச் சிந்தித்தால் கோயிலில் ரிக்கற் குத்தகை பிரசாரம் முதலியன எவ்வளவு பிழையான செயல்!

பன்னீர்மைகுன்றிச் செவிகேட்பிலா படர்நோக்கிற் கண்பவளந்நிற
நன்னீர்மைகுன்றித் திரைதோலொடு நரைதோன்றுங் காலம் நமக்காதல்முன்
பொன்னீர்மைதுன்றப்புறந்தோன் றுநற் புனல்பொதிந்தபுன்சடையினுன்உறையும்
தென்னீர்க்கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே.

பல் தனது வலிமை குறைந்து காது கேட்க முடியாது கண்பார்வை பவள நிறத்தின் நலம் கெட்டு குன்றி தோல் சுருங்கி நரைப்பும் தோன்றுகின்ற காலங்கள் எமக்கு வந்து சேர்வதன் முன்பாக; பொன்னின் நீர்மை போல ஒளிபரந்து விளங்கிட வெளிப்படத்தோன்றும் நல்ல கங்கை நீர் வைத்த புரிபுன் சடையினுன் சிவன் தங்கி இருக்கின்ற தெள்ளிய நீருடைய திருக்கடந்தையில் பெரும் கோயிலாக சேர்ந்து கொண்ட தூங்கானை மாடத்தைத் தொழுது கொள்ளுங்கள்,

பல் வீழ்ந்து பொக்குவாயாதலும் காது கேளாமல் போதலும் கண்ணின் பார்வை கெடலும் உடல் சுருங்குதல் மயிர் நரைத்தலும் மூப்பின் குணங்கள். இவை வந்தால் பின்னர் யாதும் செய்ய முடியாது! ஆதலின் இளமைப் பருவத்தில் நாம் சென்று தொழுவோம் என்கின்ருர், 6

இறையூண்துகளோ டிடுக்கண்எய்தி இழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
நிறையூண்நெறிகருதி நின்றீரெல்லாம் நீள்கழலேநாளும் நினைமின்சென்னிப்
பிறைசூலலங்கல் இலங்குகொன்றை பிணையும்பெருமான் பிரியாதநீர்த்
துறைசூழ்கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே.

சிறிது உணவுக்காக பெறும் சிறு தானியங்களின் உணவுண்டு துன்பப்பட்டு பலரும் இழித்துக் கூறிடும் வாழ்க்கை ஒழிந்திடத் தவம் செய்ய முற்பட்டு நிறைவுடைய உம் கொள்கையாக நன்கு உணவாய நெறிகளைப் பெறக் கருதி நின்றீர்கள் எல்லாம் எம் பெருமான் சிவனது நீளவுள்ள தாய் எங்கும் நிறைந்த திருவடியே நினையுங்கள்; திருச்சடை மீது இளம்பிறை மிளிரும் கொன்றை மலர் மாலை இவை பொருந்த அணிந்த எம் பெருமான் சிவன் பிரியாத நல் நீர் வளம் உடைய துறைகள் சூழ்ந்த திருக் கடந்தையுள் பெருங் கோயிலாகச் சேர்ந்து கொண்ட திருத் தூங்கானை மாடத்தை தொழுது கொள்ளுங்கள்

வறுமையால் சிறு உணவின் சஞ்சலம் எய்தி வருந்திடும் இழிப்புடையது வாழ்கை. இது ஒழிய தவம் புரிய அதற்குரிய தூய உணவு நெறி வேண்டுதல் இங்கு குறிப்பிடுகின்ருர். 7

பல்வீழ்ந்துநாத்தளர்ந்து மெய்யில்வாடிப் பழிப்பாய வாழ்க்கை ஒழியத்தவம்
இல்சூழிடங்கருதி நின்றீரெல்லாம் இறையேபிரியா தெழுந்துபோதும்
கல்சூழரக்கன்கதறச் செய்தான் காதலியுந்தானுங் கருதிவாழும்
தொல்சீர்க்கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே.

பற்கள் வீழ்ந்து நாக்கும் தளர்ந்து மேனியில் வாட்டமுற்றுக் கூனி பலரும் கண்டு நகைக்கும் படியான வாழ்க்கை [illegible] செய்யும் வகையாக ஓர் இடம் எது எனக் கருதி நின்ற நீங்கள் [illegible] எல்லாரும் சற்றும் தாமதியாது எழுந்து சென்று கல்லைச்சூழ எடுப் பேன் என கைலைமலையைத் தூக்க முயன்ற இரவணன் கதறச் செய் [illegible] காதலியான உமையும் தானும் அருளுடன் கருதிவாழ் [illegible] பழமை வாய்ந்த சீர் உடைய திருக் கடந்தை என்னும் ஊரில் வந்து அமைந்து கொண்ட பெருங் கோயிலாகும் திருத் தூங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானை மாடத்தை தொழுது கொள்ளுங்கள்.

மூப்பின் நிலமை வரு முன்பு மூவாத ஒரு நிலையைத் தவம்தரும், இதனை சாவாதவர் பிறவாதவர் தவமே மிக உடைய மூவாத பன்முனிவர் தொழு முதுகுன்றம் என பிறிதோர் தேவாரப் பதிகத்து திருஞானசம்பந்த சுவாமிகள் சொல்வார். ஆதலினுல் சைவ நெறியில் எத்துணை உயர்வுடன் நம் மக்கள் இருந்தனர் என்பது தெளிவாகின்றது. இந்த உயர்வைப் பெறவைக்கும் கோவில்களை எவ்வளவு புனிதமாகப் பேண வேண்டும்! ஐயோ இன்று நாம் காணும் கீழ் நிலையில் எப்படி கீழ் இறங்கினேம் என்பது 2 காலும் 2 கையும் படைத்த எல்லாச் சைவ மக்களும் சிந்திக்க வேண்டும்,

திருப்பணிச் சபைகளும் எஜமான்களும் தயை கூர்ந்து சிந்தியுங்கள்: நீங்கள் நம் கோவிலை உண்மைக்குரிய இடமாக ஆக்குங்கள், இல்லாதிருந்தால் உம் அனைவர்க்கும் கொடிய தண்டம் வருமென்று வேதம் முழங்குகின்றது.

கோயில் சொத்தை திருடுவாரை கோவிலில் பல பாதகமும் செய்வாரைக் கண்டாலே தோஷம் வருவிக்கும் என ஸ்மிருதிகள் கூறுகின்றன, நல்ல வழியில் போக வேண்டிய நீர் தவறினுல் பெரும் ஆபத்தைப் பெறுவீர்கள்: இதைக் கூசாது உங்கள் நலன் கருதிச் சொல்கின்றோம். 8

நோயும்பிணியும் அருந்துயரமும் நுகருடையவாழ்க்கை யொழியத்தவம்
வாயும்மனங்கருதி நின்றீரெல்லாம் மலர்மிசைய நான்முகனும் மண்ணும்விண்ணும்
தாயஅடியளந்தான் காணமாட்டாத் தலைவர்க்கிடம்போலுந் தண்சோலை விண்
தோயுங்கடந்தை தடங்கோயில்சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே-

நோயும் பிணியும் சகித்திடற்கரிய துயரமும் ஆன இவையே அநுபவிக்கும் படியான எம் வாழ்க்கை ஒழிந்திடத் தவம் வாய்த்திட வேண்டும என எண்ணி நின்றீர் எல்லாம் நாம் சொல்வதை கேளுங்கள்! தாமரை மலர் மேல் இருக்கும் பிரமனும் பூமியையும் வானத்தையும் திருப்பாதத்தால் அளந்தருளிய திருமாலும் காணமுடியாத தலைவர் அவர் இருக்கும் இடம் போல விளங்குகின்ற குளிர்ந்த சோலை வானை அளவும் படி உயர்ந்த கடந்தையுள் பெரும் கோயிலாகச் சேர்ந்து கொண்ட திருத்தூங்கானை மாடத்தைத் தொழுது கொள்ளுங்கள்,

இதனுல் தூங்கானை மாடத்தின் அருள் மிகு சிறப்பு மொழிகின்றார், ஈசன் அங்கு இருக்கும் இடம போலும் என்றதால் இது விளக்கமாகின்றது, அங்கு நல் நெறிகள் நிலவிடும் சிறப்பு அளப்பரிதாய் இருப்பதை வேத ஓசை காலையில் ஆரம்பிக்கப் படுவதை முன்னுன பதிகங்களிலும் மொழிகின்றார். 9

பசுடுர்பசிநலிய நோய்வருதலாற் பழிப்பாயவாழ்க்கை யொழியத்தவம்
முகடூர்மயிர் கடிந்தசெய்கையாரும் மூடுதுவராடையரும் நாடிச்சொன்ன
திகழ்தீர்ந்தபொய்ம் மொழிகள் தேறவேண்டா திருந்திழை யுந்தானும் பொருந்திவாழும்
துகள்தீர்கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடம் தொழுமின்களே.

வயிற்றில் கனல் வாதை பெருக்கும் பசி துயரப் படுத்தலும் அதற்கு உரித்தாய நோய் வருவதால் பழிப்பிற்கு இடமாய இந்த வாழ்க்கை ஒழிந்திடத் தவம் செய்வதென; தலையில் துலங்கும் மயிர் நீங்கப் பிடுங்கி எடுக்கும் செயலுடைய சமணரும்; மேனியை போர்த்து மூடுகின்ற காவிஉடை உடையவரும்; ஆகிய சமணரும் புத்தரும் உலகமக்கட்கு நலம் இவை என்று நாடிச் சொல்லிய சிறப்பு நீங்கிய பொய் மொழிகளை உண்மை எனத் தெளிய வேண்டாம்! அவர் காட்டும் நெறிகளை மொழிகளை விடுத்து திருந்திய ஆபரணம் உடைய உமையம்மையும் தாமுமாகக் கூடி வாழ்கின்ற குற்றம் இலாத நன்மையின் விருத்தி உடைய கடந்தை என்னும் ஊரில் பெருங் கோயிலாக அமைந்த தூங்கானை மாடம் என்னும்தலத்தை தொழுது கொள்ளுங்கள்,

துகள் தீர் கடந்தைத் தடங் கோயில் என்றது; கோயிலில் நிலவும் நற்பண்புகள் குறித்ததாகும். இன்று நாம் காணும் கோயில்கள் போலன்று இன்றைய கோயில்களையும் அந்தணரையும் துகள் தீர்ந்தார் எனச் சொல்ல முடியாது! 10

மண்ணார்முழவதிரும் மாடவீதி வயற்காழி ஞானசம் பந்தன்நல்ல
பெண்ணாகடத்துப் பெருங்கோயில்சேர் பிறையுரிஞ்சுந் தூங்கானை மாடமேயான்
கண்ணார்கழல்பரவு பாடல்பத்துங் கருத்துணரக் கற்றாருங் கேட்டாரும்போய்
விண்ணோருலகத்து மேவிவாழும் விதியது வேயாகும் வினைமாயுமே.

மண் அதிர முரசப் பறை முழங்கும் மாடங்கள் நிறைந்த விதிகளை உடையதும் செந் நெல் வயலின் சிறப்பு முடைய சிகாழிப்பதியில் வந்து அவதரித்த ஞானசம்பந்தன் நல்ல பெண்ணாகடம் (கடந்தை) என்னும் ஊரில் காணப்படும் இளம் பிறை உரஞ்சிப் போகும் படியான பெருங் கோயிலாகும் தூங்கானை மாடத்தில் இருப்பவனுய எம் பெருமானது கண் நிறையும் திருவடி பரவும் இப்பாடல் பத்தினையும் கருத்தில் உணரும் படி கற்றவரும் கேட்டவருமான அடியார்கள் யாவரும் சென்று வானோர் உலகத்து வாழும் விதி அது வேயாகும்! அத்துடன் அவர் வினைகளும்மாயும்.

கருத்துணரக் கற்றாரும் என்றதால் பாடலின் இனிய இசைச்சுவை மட்டுமன்றி கருத்தின் சுவையும் தெளிதல் நன்று என்றதாகும்.! கருத்து உணராது விடின் பாடல் பாடிப் பிரயோசன மில்லை, இப்பாடல் முழுவதும் கோயிலில் நல்நிலைகள் நெறிகள் பற்றி இங்கு எடுத்துச் சொன்னவாறுகும். கருத்துணரக் கற்பதை ஓதுவாரும் சிந்தியுங்கள்

# சகல கொடுமைகளில் நின்றும் நீங்கினுலன்றி யாருமே அருள் அறியார்

## இயமன் இப்படி நாச்சிகேதனிடம் சொன்னதைத் தெரிவிக்கும் கதாஉபநிடதம் தருவன சில

கதா உபநிடதம் பற்றி முன்பு சில வாக்கியங்கள் தந்தோம். அதன் தொடர்பை கீழேயும் காணுங்கள். அறிவுக்கறிவான கடவுளை அறியவிரும்பின் யாரையேனும் கொடுமைப்படுத்தலோ அல்லது கொடுமைக்குள்ளாக்கலோ இலாது கபடமுடைய கிரியைகள் இலாது பொய்ப் பிரசாரம் நீதியற்ற பணம் வசூலிப்பு இவை இலாது தரும சிந்தை உடையவராய் அன்பு அகிம்சை முதலிய நற்குண வழிச் செல்வார்க்கே கைகூடும் என்பதை கீழே தரப்படும் உபநிடத வாக்கியங்களால் தெளியுங்கள்.

அல்லலும் திகிலும் நிறைந்த எம் வாழ்வில் எடுத்ததற்கெல்லாம் நேரமில்லை நேரம் போச்சு என அவதியுறும் இன்றைய சமுதாய அமைப்பில் சிறு பொழுதாதல் அமைதியுடன் இருந்து உங்களைப் பற்றிய உண்மை வரலாற்றை அறிய இப்பகுதி உங்களுக்கு உதவும் என நம்புகிறேம். வீணருடைய பாட்டுக்கள் பேச்சுக்கள் இவை கேட்டு மகிழ்கின்ற அவை நீங்கி இவை போன்ற உண்மைகளை உணருங்கள். பணம் பறிக்க சதி செய்து செய்யத் தகாத பாதகங்களை செய்து ஏமாற்றும் பிராமணரது கையில் பிரசங்கி கையில் பாடுபட்டு தேடிய உம் பொருளைக் கொடுத்து பிராமணர் ஏமாற்ற வழி செய்து நீவிரும் ஏமாந்து பழிக்குள்ளாகாது மக்கட்கு தாக சாந்தி செய்து அமுதூட்டி அருள் நெறியைப் பேணி நன்றுடன் என்றும் வாழுங்கள்,

### கதா உபநிடதம்

உண்மையான ஆத்மா இதை அறிந்தால் அதை நன்ருக விளங்கிக் கொண்டு தன்னிலும் ஆத்மாவை பிரித்துணர்வான். ஆத்மாவே தருமத்தின் உயிராவது. இத்தகைய உடம்பின் மூலச்சத்தான பூரணப் பொருளை உணர்ந்து கொண்டவன் என்றும் ஆநந்தமுறுகிருன் ஏன் எனில் அவனே ஆநந்தத்திற்குரிய காரணப்பொருளைப் பெற்றமையால் ஆநந்த முறுகிருன். இப்பொழுது நாச்சிகேதனே உண்மைப் பொருளான பிரம்ம வழி உனக்கும் திறக்கப்பட்டுள்ளது என்ருன் இயமன். 13

அப்போது நாச்சிகேதன் சொல்வான் இயமனே! நன்மைக்கும் தீமைக்கும் வேருக நீ காண்பதும் ஓர் காரியத்திற்கும் அது நிகழவேண்டிய காரணத்திற்கும் அப்பாலாகிக் காணப்படுவதும் எப்பொருள்? அதனை உணர்த்துவாய். 14

இயமன் சொல்வான் எந்த எல்லையை வேதங்கள் இதுதான் முடிவு என அறுதியிட்டுக் கூறுகின்றனவோ எதனை எந்த வகையான கிரியாமார்க்கமும் குறிக்கின்றனவோ எந்த எல்லையை பிரமச்சாரிய விரதம் பூண்ட முனிவர் காண விருப்புகின்றனரோ அதை நான் உனக்கு சுருக்கமாகச் சொன்னுல் அது 'ஓம்' என்றதாகும். 15

ஓம் என்பது தான் உண்மையில் பிரமம் இந்த ஓம் என்னும் எழுத்தே எவற்றிலும் மேலாவது! இந்த எழுத்தை அறிந்து தெரிந்து கொண்டவர் தாம் விரும்பிய எல்லாவற்றையும் பெறுவார்:

(இதனை வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய் என்றும் வேண்டினர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட என வரும் நாயன்மார் வாக்கும் உணர்க.) 16

இந்த எழுத்தே மனிதனுக்கு திறமையான உறுதி! இதுவே மிக உயர்வுடைய உறுதி! யார் எனினும் இதை உணர்ந்தார் பிரம்ம உலகில் சென்று சஞ்சரிப்பார்கள். 17

தன்னைத்தான் உணர்ந்தால் தான் பிறப்பதில்லை தான் இறப்பதில்லை என்பது தெளிவு வரும். ஆத்மா எதிலும் தோற்றுவதில்லை. அதனின்றும் எதுவாகிலும் தோற்றப்பட்டதில்லை. ஆத்மா பிறப்பற்றதாய் தெய்வமாய் என்றும் உள்ளதாய் பழமைக்கும் பழமையாய் உள்ளது. உடம்பு அழியும் போது ஆத்மா அழிவதில்லை. 18

ஒருவனைக் கொலை செய்வார் தான் கொல்வேன் என நினைத்தால் அல்லது கொல்லப்பட்டார் தாம் கொல்லப்பட்டேன் என நினைத்தால் இவர்இருவர் இருவரும் சரியாக உணர்ந்தவர் அன்று. 19

தானே தானுனதன்னிலும் தானுன ஆத்மா கொல்வதுமில்லை கொல்லப் படுவது மில்லை

ஆத்மா சிறிதிலும் சிறிது (அணுவிலும் அணு) பெரிதிலும் பெரிது அது எல்லா உயிரினங்களுடைய இருதயத்திலும் உண்டு. எல்லா ஆசைகளையும் நீக்கி விடுவானுகில்ஒருவன் தானுன சர்வ வல்லமையின் தேவ இராச்சியத்தைத் அடைந்து புலன்களின் மனதின் இச்சைகள் சேட்டைகளால் எழுந்த துயரங்கள் அத்தனையையும் அகற்றி துக்கம் என்பதை நீக்கிக் கொள்வான். 20

ஆத்மா நிலையாக இருப்பதாயினும் மிகு தூரம் அது போகின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே கிடப்பது போன்றாலும் ஆத்மா எங்கும் செல்கின்றது என்னை அல்லாது ஒளி உடைய ஆத்மாவை (சிவனை) வேறுயார் அறிவார் அது ஆநந்திக்கின்றது. ஆநந்திக்கின்றதுமில்லை. எனக் கூறினன் இயமன் 21

ஓர் புத்திசாலி ஆத்மாவை உணர்ந்து கொண்டு அது நிலையற்ற உடம்பில் வாழ்வது எனக் கண்டுகொண்டும் அதுவே தானாகி உடம் பற்ற நிலையில் நின்று ஆன்மா எல்லாவற்றையும் கடந்த பெரிதாகவும் எல்லாவற்றையும் உள் அடக்கயும் விளங்குவதை உணர்ந்து கவலையினை நீங்கி ஒரு காலமும் துக்கமடையான். 22

வேதங்களைக் கற்பதால் ஆத்மாவைப் பெற முடியாது: அல்லது புத்தியால் ஆத்மாவை அறியமுடியாது அல்லது தெய்வத்தன்மை வாய்ந்த நூல்களைக் கற்பதால் அதைப் பெறமுடியாது. ஆத்மா தன்னால் தெரிந்து அநுக்கிரகிக்கப்பட்ட ஒருவர்க்கு அது தெரியப்படும், அத்தகையோர்க்கு ஆத்மாதன் உண்மை நிலையை உணர்த்துகின்றது. 23

எதற்கும் முதலாக துட்டத்தனம் வஞ்சனை இவற்றில் நின்று நீங்காதவனும் மன அமைதி இல்லாதவனும் அடக்கம் சாந்தம் பொறுமை இல்லாதவனும் ஆகியவன் ஆத்மாவை ஒரு போதும் அடைய மாட்டான், உண்மை நிரம்பிய தூயவாழ்வினால் விளையும் சிறந்த உணர்வால் ஆன்மா உணரப்படுவது, 24

ஆநந்தமயமான ஆத்மாவை [கடவுளை] எங்கிருக்கிறார் என ஆருக்குத் தெரியும். அறியமுற்படும் அந்தணர்களும் அரசர்களும் யாவரும் எல்லாமே அவருக்கு உணவாகின்றது, மரணம் என்பதும் அவரில் மறைகின்றது.

உலகபந்தத்தில் நிறைந்த மனமுடையவரால் ஆத்மாவை அறிய முடியாது. ஏனெனில் படைக்கும் காக்கும் தொழில் உடைய பிரம்ம குலம் விஷ்ணுகுலம் (அரசர் குலம்) மரணம் முதல் அனைத்தும் அதன் ஆட்சிக்குட்பட்டது: 25

# எல்லாம் செயவல்ல கடவுளால் செய்ய முடியாததும் ஒன்றுண்டு!

## அது என்ன சொல் பார்ப்போம் எனக்கேட்டார் யோகசுவாமிகள்.

ஒரு நாள் யோக சுவாமிகள் திருவடி நிலைக்கு ஓர் அன்பரின் காரில் சென்றார். சென்று கொண்டிருக்கும் போது பொன்னாலை வரதாசப் பெருமாள் கோவிலைத் தாண்டி கடற்கரை வீதியால் போய்க்கொண்டிருந்தார். ஆநந்த மயமான அந்த வெளியில் எப்பொழுதுமே ஓர் சாந்தம் நிலவும். அவ்வாறு போய்க் கொண்டிருக்கும் வேளை திடீரென சுவாமி காரை நிற்பாட்டச் சொன்னார். காரைச் செலுத்திய அன்பர் சற்று திகைப்புடன் காரை நிறுத்தினார்.

ஏனெனில் சுவாமி அவசரமாகக் காரை நிறுத்தச் சொன்னது என்ன காரணமோ என விளங்கிட முடியாது காரை நிறுத்தினார். நிறுத்தியதும் சுவாமி அன்பரை நோக்கி இங்குபார் கடவுள் எல்லாம் வல்லவர் எங்கும் உள்ளவர் எல்லாம் செய்பவர், அப்படியான கடவுளுக்கும் செய்ய முடியாத செயல் ஒன்று உண்டு, அது என்ன சொல் பார்ப்போம் என்றார்.

அன்பர் திடுக்கிட்டு இதென்ன கடவுளுக்குச் செய்யமுடியாத ஒரு செயல் என்ன எனச் சுவாமி கேட்குதே! இதற்கு நான் என்ன பதில் சொல்லலாம் என தடுமாறும் வேளையில் சுவாமி பெரும் சிரிப்புடன் ஆநந்த பரவசமாகி என்ன காணும் இது உமக்குத் தெரியாதே? கடவுள் அன்பர் வலையில் தப்ப முடியாது! பாரும் காணும் எல்லாம் செய்ய வல்ல பெருமானுக்கு இது மட்டும் செய்ய இயலாது என்று சுவாமி பெரும் சிரிப்புடன் கூறினராம்.

அன்று சுவாமி கொண்ட அற்புதப் பரவச ஆநந்தமும் பேரருளின் உவகைச் சிரிப்பும் போன்று தான் எக்காலமும் காணவில்லையாம். அதன் பின்னர் தன்னை நோக்கி சரி இனி விடு காரை என்றாராம். தான் திகைத்துப் போய் தனது காரைச் செலுத்திக் கொண்டு சென்றாராம். இவைகளை விளங்கினால் கோவிலில் ஒலிபெருக்கி பாடுவாரே அல்லாது நல்லூர் முதலாளி சுவாமிக்கு வயிற் அடிக்குமோ? இவ்வளவு படித்த மனிதர் என்று உலகத்தவர் கருதக் கூடிய திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையாரும் ஒலி பெருக்கி பாவிப்பாரோ?

இதைத்தான் மாணிக்கவாசகரும் பத்திவலையில்படுவோன் காண்க என்கின்றார். பத்திமை அத்துடன் தூய அடிமைத் திறமல்லால் சிவனை வேறு வகையால் காண முடியாது என்கிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். பத்திமை அடிமைத்திறம் இரண்டும் பாவச் செயல் உடையவர்க்கு எய்தாது.

## அன்பின் செயலிலாத ஆணவச்செயல்.

அதற்காகத்தான் பத்திமையிலாத செயல் ஒலிபெருக்கி லயிற் அடித்தல் இவைகள் செய்யாதீர் என்று அவை அன்புடைய செயல் அல்ல, அது தனது ஆணவத்தைக் காட்டும் ஆங்காரச் செயல் என்றோம், இந்த லயிற் அடிக்கும் செயல் துவக்கால் சுடுவதற்கு ஒப்பாகின்றது: எங்களிடம் மிசின் இருக்கின்றது. ஒளி இருக்கின்றது, என்ற இறுமாப்பே அன்றி லயிற் அடிக்கும் செயல் வேறு எதற்கும் ஒப்பாகாது!

சிலர் லயிற் அடிச்சால் சுவாமி மினுங்கும் என்பார். ஐயா நான்கு நெய் தீவர்த்திகளை இருபுறமும் பிடித்துப் பாருங்கள். என்ன அழகாக மினுங்கும். தேங்காய் நெய் தீவத்தி ஓர் பத்திமையின் செயல். லயிற் அடித்தல் ஆணவத்தின் செயல். உண்மையில் இந்த லயிற் அடித்தலால் நம நாடு அருள் வழியில் முன் எறுது கண்ட பாவனையில் கொண்டை முடியப் போனால் நெடுகச் சண்டை தான் பெருகும். அடி தான் விழும் அல்லல் படுவீர்கள் இதைத் தெரிவிப்பது ஆகமம்.

## நல்ல நினைப்புக்கள் தானாக வரும்கோவிலில்

கூச்சமிலாது சுவாமிக்கு இந்த லயிற்றை அடிக்க எல்லாருடைய உள்ளத்திலும் கூச்சமிலாது கொலையும் செய்யலாம் என்ற எண்ணம் தானாக உருப் பெறும். பத்திமை அன்பு இவை உடையவனுக்கு இன்னுமொரு உயிரைக் கொல்வது என்றால் அதைவிடக் கவலை தரும் செயல் வேறு இல்லை.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திரு ஒற்றியூரில் இருக்கும் நாள் திருவாரூரை நினைந்தார். நினைந்தவுடன் அங்கு போக வேண்டும் என்னும் அவா எழுந்தது. ஆனால் திரு ஒற்றியூரை விட்டுப் போகேன் என சங்கிலியார்க்கு சத்தியம் செய்தாச்சு! போக முடியாது! ஆனால் திருவாரூரில் கொண்ட பற்று விடுகின்றதில்லை. எனவே போகத்துணிந்து திருவொற்றியூரைத் தாண்டிப் போகிறார். போற வேளை கண் இரண்டும் பார்வை செட்டது.

கலங்கினார் திரும்ப மனம் வரவில்லை. மேற் கொண்டு போகின்றார். உடம்பினில் நோயும் வந்து காண்டது, நோயுடன் ஒருவன் கோலில் பற்றிப் பிடித்துக் கொண்டு போகின்றார். போகும் போது அவர் வாக்கில் வரும் பதிகம் ஒன்று என்று போய் திருவாரூர் சேர்வேன் என்றதாகும்.

ஏன் திருவாரூர் போக வேண்டும் என்றால் திருவாரூர் கோயிலைச் சென்றடைந்தால் மனிதனிடத்து எழும் தீய எண்ணங்கள் அந்தத் தலத்து எல்லை மிதித்தாலே ஏழாது என்றதாகச் சொல்கின்றார்.

இதனைத் தனது பதிகத்து "நல்ல நினைப்பு ஒழிய நாள்களில் ஆருயிரைக் கொல்ல நினைந்ததுவும் குற்றமும் அற்று ஒழிய" திருவாரூர் எல்லை மிதிக்க வேண்டும் என்கின்றார். எப்படி இருக்கிறது வார்த்தை!

திருவாரூர் எல்லை மிதித்தால் நல்ல நினைப்புக்கள் நீங்கிய கொலை செய்ய எத்தனித்தல் கற்பழிக்க எத்தனித்தல் காம உணர்வு கொள்ளல் இவை முதல் பல செயலையும் செய்யும் எண்ணம் வாரதாம்! இதை தென் இந்தியாவிலோ இலங்கையிலோ யார் உணர்வார்.

## கோவில்களில் இன்று என்ன நடக்கின்றன!

இன்று எமது நாட்டில் கோயில் வாய்தலில் சுட்டுக் கொலை, மடப்பள்ளியில் சில பெண்கட்கு தேனீர் கொடுத்து இருவர் சேர்ந்து கற்பழிப்பு. செருப்பால் அடி பிடி இப்படியாக எத்தனையோ கூடாத செயல்கள் நடக்க வேண்டாத செயல்கள் நடக்கின்றது. அப்பொழுது இவை நிகளும் இடங்களை பரிசுத்த முடைய தேவாலயம் என்று சொல்லலாமோ.

அடிமைத் திறம் என்பது சுவாமிக்கு விளக்கு ஏந்துதல் விளக்கிடுதல் பூக்கொய்தல் மாலை கட்டல் சாத்தல் இவையாகும். இதை விடுத்து லயிற் அடித்தல் ஒலி பெருக்கி இவை எல்லாம் அடிமைத் திறம் அன்று, பத்திமை அன்று. இவை ஊர் மக்களுக்காகச் செய்யப் படுவன. ஆகையால் இத்தகைய செயல் வளர வளர இன்னமும் இன்னமும் மக்கள் மனம் தீய வழியில் பெருகப் போகின்றதே அன்றி நல் வழிக்கு வராது. அதற்காகவே கோவிலில் வருவார் அத்தனை பேருடைய கெட்ட நினைப்புக்களும் கோவிலடியில் வந்தால் அகலும் படியாக ஆகமம் சொன்னவாறு கோவிலைப் பரிபாலியுங்கள் என நாம் கருத்துத் தெரிவித்தோம். நாம் சிவன் அடிமைத் திறம் உணர்ந்து இவை சொன்னோம் அன்றி வேறில்லை:

பல கோயில்களில் பெரும் பெரும் அபசாரச் செயலைத் திருவிழாக்கள் ஏற்படுத்தி விடுகின்றன. இவைகளை மட்டுப் படுத்தா திருந்தால் நிச்சயம் அக் கோவில் போய்க் கும்பிடுவர்ர் உள்ளத்து அக் கோயில் வன் செயலின் ஊக்கத்தை வளர்த்து விடும்.

## குறையுடைய கோவிலை கும்பிட்டு பலனில்லை

இக் கோயில்களைக் கும்பிடுவார்க்கு தவநெறிகள் ஒரு போதும் கைகூடாது. இன்று எனது திடமான அபிப்பிராயம் கோவில் வீதி எல்லைக்குள் பிரசங்கம் வில்லுப்பாட்டு பொப்இசை கலியாணம் இவை நடைபெறு மேல் நிச்சயம் அக்கோவிலைக் கும்பிட்டு தவநெறி வராது:

நாயன்மார்கள் உலகில் உள்ள எல்லாக் கோயிலையும் பாடவில்லை! அவர்கள் அருள் விளங்கும் தலங்களையே பாடி உள்ளனர்; ஆகமம் சொன்னவாறு ஒழுகும் கோயில்கள்; சிவனடியார் தொண்டு செய்யும் கோயில்கள்; இவை தான் அருட் பெருக்கத்தை வருவிப்பன. அதை விடுத்து கலியாணம் சீக்கிரம் வர விளக்கு பிடிக்கும் கோயிலும் அந்த வகைகாசுவாங்கித் திருப்பணி செய்யும் கோயிலும் தவநெறிக்குரியன அன்று.

ஆகமங்கள் எல்லாம் கோயிலில் சாந்தியையும் புனிதத்தையும் மங்கல இசையையும் பாவிக்கும் படியும் நெய் விளக்கே பிரதானம் என்றும் வலி உறுத்தின, ஒலிபெருக்கி லயிற் அடித்தல் முதல் இயந்திரச் செயல்யாவும் அமங்கலச் செய்கைகள் எனவும் அவற்றை கோயில் உட்புறம் வெளிப் புறத்திலுமே பாவித்தல் ஆகாது எனவும் மொழிவன.

## நீரால் விளக்கிட்ட நீதியை உணர்வீரோ!

திருவாரூரில் நமிநந்தி அடிகள் நீரால் விளக்கிட்டார் ஏன்? நெய் தேட முடியாத பொழுது! திருவருள் கடாட்சம் பெற்று நீரால் விளக்கிட்டார், அவர் விளக்கிலாத கோயிலிற்கு விளக்கிட வேண்டின் நெய்க்கு ஏன் தேடி அலைவான்? வேறு எண்ணை வகை கொழுப்பு இவை பாவித்திருக்கலாமே? பிறவியில் கடை கெட்ட பிரசார மூலம் வெறுங்கதையும் வேடிக்கையும் பேசி பணம் பறிக்கும் பிரசாரகரே உங்களில் ஆருக்கும் மானம் இருந்தால் இதற்கு ஓர் பதிலை சொல்லுங்கள்? அன்று நமிநந்தி அடிகள் இன்று உள்ளது போல் ஒரு லயிற் என்சின் இருந்தால் அதை ஒன்றை வாங்கி லயிற் பூட்டி இருப்பாரா? அல்லது திருக்கேதீச்சர காரர் செய்தது போல குருகுலத்தில்படித்துத் தேறிய பிராமணப் பிள்ளையை என்சின் இயக்குனராக வைத்திருப்பாரா? திருக்கேதீச்சர திருப்பணிச் சபையார் யார்க்கும் சைவம் என்ன என்று தெரிந்தால் இதற்கு ஓர் பதில் தாருங்கள்? நீங்கள் வேத நெறிக்குரியவராக ஒழுக வேண்டிய ஓர் பிராமணப் பிள்ளையை உங்கள் லயிற் என்சின் இயக்குனராக வைத்ததின் மர்மம் என்ன! தோசை இனித்ததா? வடை இனித்ததா? வேதநெறிக்கு வாழவைக்க வேண்டிய பிராமண குடும்பங்களை நீங்கள் மிலேச்ச நெறிக்கு ஆளாக்கலாமா? நீங்கள் நினைத்தால் உங்கள் பெரும் பகுதிப் பணத்தில் ஒரு பகுதியை வேத நெறி வளர்த்திட பாவிக்க முடியாதா? தயவு செய்து என்ன செய்ய வேண்டிய நீங்களும் என் செய்கின்றீர்.

பாடல் பெற்ற தலங்களின் நிர்வாகம் ஏனைய கோவில்களுக்கு எடுத்துக்காட்டாக அமைய வேண்டும். நாயன்மார்களுடைய நல் ஒழுக்[illegible] பெற்ற தலம் எனப் பெருமைப்படும் நிர்வாகம் பிரதிபலித்துக் காட்ட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் அரசையும் வேம்பையும் பாதுகாப்பது சைவரது முதற் கடமை.

## மரம் வளர்த்தலின் புண்ணியம் பற்றி மறைஞானசம்பந்தர் தெரிவிக்கின்ருர்.

கலிகாலத்தில் மனிதனல் செய்யக் கூடிய பெரும செயல் கொலை கோபம் கொள்ளல் என திருவாரூர் புராணம் கூறு கின்றது. எத்தனையோ ஆயிரம் மக்களை ஒரு நொடிப் பொழு தில் சுட்டு அழித்து தன் மனதில் கொண்ட கோப வெறி ஆறுவான் என்பது நம் கண் கூடாகக் காண்கின்ரோம்.

இந்த வகை நிகழாது சைவ நெறியில் நீண்ட காலமாக அகிம்சை என்னும் தத்துவமும் புலன் அடக்கம் என்னும் தத் துவமும்உயர்ந்து நெறியில் நின்றன, கோவிலில் ஒலி பெருக்கி மின் ஒளி இரண்டும் புகுந்ததும் முன் சொன்ன அவை இரண்டும் மறைந்து விட்டன. எங்காகிலும் ஒரு கோவிலில் அகிம்கிசை புலன் அடக்கம் இவை இரண்டும் இலங்கையில் இருக்கின்ற தோ என்பது சந்தேகம்.

இந்த அகிம்சையின் உயர்வை எமது சைவ நெறி மரங் களிலும் வைத்துக் காண்பிக்கின்றது. பொதுவாக நிழல் செய் யும் மரங்களை அதாவது ஒருவர் வைத்து உண்டாக்கிய மரங் களை வெட்டி எறிய உண்மையான சைவர்கள் யாரும் விரும் பார்கள்!. ஏனெனில் திருமுறைகளில் ஒன்ருன திருவாசகத்து மாணிக்கவாசகர் ''தாம் வளர்த்ததோர் நச்சு மாமரம் ஆகி லும் கொலார் நானும் அங்ஙனே உடைய நாதனே'' என் கின்ருர். பல முறை நம் சைவ மக்களுக்கு இதன் தாற்பரியத் தைத் தீபமூலம் புகட்டி நின்ருேம்.

திருமுறைகளை ஓத வேண்டும் என வெளியில் சொல்வது சுலபம். ஆனல் திருமுறைகளில் சொல்லிய வற்றைக் கண்டு உணர்ந்து நாமும் அவ்வழியில் ஒழுகுதல் இயலாத தொரு காரியம். இந்த வழியில் திருமுறையே நாம் ஓதும் படி கேட் போம் என்று சொல்லிய திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபையே பெரும் தவறுகளை இழைத்துள்ளது.

திருவாரூர் புராணத்தல் மிகப் புண்ணியமான செயலாக அரசமரம், வேப்பமரம் இரண்டும் பாதுகாக்கப் படல் வேண் டும் எனச் சொல்கின்ருர்! அத்துடன் அரசமரம், வேப்பமரம் வைத்து உண்டாக்கல் நரகம் புகாமல் பாதுகாக்கும் நன்மை தரும் வாழ்வு காட்டும் என்கின்ருர்.

அரசமரத்தின் அடியில் பிரமனும் நடுவில் சங்கேந்திய விஷ் ணுவும் நுனியில் உருத்திரனும் இருப்பார் என்கின்ருர். அடு த்து அரசிற்கு மனைவி போல்வது வேம்பு என்றும் சக்தி யாகும்எனவும் சொல்கின்ருர். வேப்பினைத் தறித்தல் ஒரு பிராமணப் பெண்ணைக் கொலை செய்தல் போலாகும் என்பர்.

இந்த வகையாக சொல்லப் பட திருக்கேதீச்சர வீதியில் நின்ற வேம்பு பலதையும் சித்திரத் தேர் செய்தற்குபலகை அரியத் தறித்துள்ளார்களாம். இந்த வேம்புகளில் சில முன்பு உள்ள திருப்பணிச் தலைவர் ஒருவரால் வைத்து உண் டாக்கப் பட்டவை எனவும் சிலர் தெரிவிக்கின்றனர். ஒரு சித் திரத் தேருக்கு மரம் எங்காகிலும் எடுக்கலாம். ஆனல் வீதி யில் நின்ற வேம்பை தறித்து வீழ்த்திய பின் திரும்ப அதை நட்டு தழைத்திட வைக்கலாமோ? அந்த உணர்வு திருப்பணிச் சபைக்கு விளங்கப் போகின்றதோ? வீதியில் நின்ற வேப்பம ரங்களுக்கும் கோர்ட் மார்சல் போலும்! நாம் என்செய்யலாம்! தம் புகழை ஒலிபெருக்கி வானெலி மூலம் உலகெங்கும் பரவ வைத்தல் மேலான செயல் எனக் கருதுவார் முன் என் சொல் லியும் பயன் வராது.

# நிர்வாகத்தில் நீதியை விரும்பினேம்

## துர்க்கை கோவில் கடிதத்திற்கு பதில்.

தெல்லிப்பழை
8.8.79

ஆசிரியர் அவர்கள்
சந்திரதீபம்
கொக்குவில்,

ஐயா!

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தர்மகர்த்தாசபைக் காரியத ரிசி அவர்களின் 21-7-79ற்குரிய கடிதத்தின் பிரதி எமக்கும் கிடைத் தது, நன்றி.

எமது 20-10-78 குரிய கடிதத்திற்கு மேற்படி ஆலயநிர்வாகத்தி லிருந்து எவ்வித பதிலுமில்லை. இது தொடர்பாக 4-4-79ல் காரியதரிசி அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் நிழற் படப் பிரதியை 1ம் இலக்க மிட்டு இத்துடன் இணைக்கிரேம்.

உபயகாரரால் கொடுபடும் பணம் முழுவதற்கும் பற்றுச் சீட்டு வழங்கப் படுவதில்லை என்பதற்கு 1ம் இலக்க நிழற்படப் பிரதியின் கீழ்ப் பகுதியே போதிய சான்ருகும்.

1968ம் ஆண்டு வரவு செலவுக் கணக்கின் நிழற்படப் பிரதி ஒன் றை இல.2 எனக்குறித்து இத்துடன் இணைக்கிரேம். அதிற் குறித்த ஒரு திருவிழாவிற்கு வரவிலும் செலவு அதிகமாகவோ அன்றிக் குறை வாகவோ இருப்பதைக் காணலாம். இப்போ கணக்கு எழுதாமலிருக் கும் போது இப்படியான மிகுதியோ அதிக செலவோ யார் கையிற் பொறுப்பு? இதை ஊன்றிக் கவனித்தால் விசமத்தனமான சுட்டிக் காட் டுதல் எனக் கொள்ள முடியா தென்பது எமது முடிவு.

எமது கடிதத்தில் கூறியவை யெல்லாம் நாம் அறிந்த வரையில் உண்மையே. உதாரணத்திற்காக ஒன்றை தெரிவிக்க விரும்புகிரேம். மகோற்சவ காலத்தில் விரதமனுட்டித்து அங்கப் பிரதட்சனம் செய்ப வர்களிடம் பணம் பெற்று அனுமதி வழங்கியதை இத்துடன் இணைக் கப்பட்டிருக்கும் இல,3 நிழற்படப் பிரதி உறுதிப் படுத்துமென நம்பு கிரேம்.

எமது கிராமத்தில் முன்னேறி வரும் ஆலயத்தின் குறை குற்றங் களைப் பகிரங்கப் படுத்த நாம் விரும்பவில்லை. எமது முறையீட்டைச் சபையங்கத்தலைவர்கள் அலட்சியம் செய்யாது தகுந்த நடைமுறை களைக் கையாண்டிருந்தால் இவ்விவகாரம் விரிவடைந்திரா தென்பதை வருத்தத்துடன் தெரியப் படுத்துகிரேம்.

இங்ஙனம்
தங்கள் நன்றியுள்ள.
ஆ. கனகசபை
தி.ஆறுமுகசாமி.

---

கடிதத்தில் குறிப்பிட்ட
இணைப்புகள்

அம்பாள் துணை

## இல. 1

தரை மண்கலட்டி
தெல்லிப்பழை
4.4.1979.

கௌரவ காரியதர்சி அவர்கள்
தர்மகர்த்தா சபை
துர்க்காதேவி ஆலயம்
தெல்லிப்பழை.

அன்புடையீர்.

20.10.1978 ல் மேற்படி சபைத் தலைவருக்கு நானும் வேறுபலரும் கைச்சாத்திட்டு எழுதிய கடிதத்திற்கு இது வரை பதிலில்லை, அன்றி ருந்த சபைத் தலைவர் பதவியிலிருந்து விலகியுள்ளார் என்பதை அறி ந்து இக்கடிதத்தைத் திரும்பவும் உங்களுக்கு தருகிறேன்.

மேற்படி 20 10 1978ல் சடிதத்தில் ஆலய நிர்வாகத்தில் கவனி க்க வேண்டியன:— என்ற தலைப்பின் கீழ் 5ம் பந்தியிற் குறிப்பிட்ட;— ''நிர்வாகத்தால் பெறப்படும் பணம் எல்லாவற்றிற்கும் பற்றுச் சீட்டு வழங்கப் பட்டுக் காசுப் புத்தகத்தில் பதியப் பட்டு வருகிறதா என்ற வினவிற்கு இதன் கீழ்த் தரப்பட்டுள்ள கடிதமே விடையாகும்.

ஆகவே பெறப் படும் முழுத் தொகைக்கும் பற்றுச் சீட்டு வழங்கி வரவு செலவு எழுதி ஆக வேண்டிய நடவடிக்கை எடுப்பீர்களென் றும் எம்மை மேல் நடவடிக்கைகளில் ஈடுபடாதவாறு ஆவன செய் வீர்களென்றும் எதிர்பார்க்கிறேன், இவை விசமத்தனமாக எழுதப்ப டவில்லை யென்பதை தாழ்மையுடன் அறியத் தருகிறேன்,

இங்கஙனம்
ஆ.கனகசபை.

ஐயர்.

துர்க்காதேவி ஆலய நிர்வாக சபைத் தலைவி, காரியதரிசி, தனதி காரி மூவருக்கும் நீங்கள் விடுத்துள்ள திகதியிடப் படாத கடிதத்திற்கு மறுமொழி அம் மூவர் சார்பாக இங்கு காண்க,

திருவெம்பாவை விழாஉபயகாரர் ஒவ்வொருவரும் கொடுத்த செ லவுக்கான விபரம்;...

| | | |
|---|---|---|
| குருதட்சணை | உதவியாளர் ரூபா | 15 |
| மேளம் | | 10 |
| பண்டாரம் | | 6 |
| வெள்ளைகட்டுக்காரர் | | 4 |
| புராணப்படிப்பு | | 5 |
| கோயில் | | 10 § |
| பிரசாதம் | | 25 |
| மொத்தம் | ரூபா | 75 |

உ அடையாள மிடப்பட்டதும் கோயிற் கணக்காற் பெற்றுக் கொள் ளப் பட்டதும் ஆன ரூபா 10க்கு மட்டும் பற்றியதாகச் சீட்டு வழங் கப்பட்டது. இத் தொகையே கோயிற்கணக்கிற் சேர்க்கப் படுவது. ஏனையவை அவரவர்க்குக் கொடுபடப் பட்டன.

உங்கள் கடிதற்திற் குறிப்பிட்ட திரு.ஆ.கனகசபை கொடுத்த ரூபா 75 மேற்கண்ட வாறு செலவிடப்பட்டன. 10 மட்டும் அவர் கணக் கால் அதாவது 9ம் நாள் உபயக் கணக்கால் கோயிலுக்குரிய தொகை யால் அத்தொகைக்கு மட்டும் பற்றியதாகச் சீட்டு வழங்கப் பட்டது.

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள
நம.சிவப்பிரகாசம்

## இல, 2

| கோயில் உபயப் பணக் கணக்கு | | | ரு | ச |
|---|---|---|---|---|
| (கொடியேற்ற இரவு) | | திரு. வே,செல்வரத்தினம் | 150 | 00 |
| 2 ஆம் | தருவிழா | திரு.த. பொன்னம்பலம் | 270 | 00 |
| 3 ஆம் | ,, | சிரமதானத்தினர் | 260 | 00 |
| 4 ஆம் | ,, | திரு.க.கணேசரத்தினம் | 265 | 00 |
| 5 ஆம் | ,, | ,, அ.சுப்பிரமணியம் | 265 | 00 |
| 6 ஆம் | ,, | ,, அ.துரைசிங்கம் | 265 | 00 |
| 7 ஆம் | ,, | ,, க.வைத்திலிங்கம் | 265 | 00 |
| 8 ஆம் | ,, | ,, க.அப்பையா | 147 | 50 |
| ,, | ,, | ,, க.இளையகுட்டி | 147 | 50 |
| 9 ஆம் | — | — நம.சிவப்பிரகாசம் | 365 | 00 |
| 10ஆம் | — | — ஆ.கனகசபை | 260 | 00 |
| 11 ஆம் | தேர் | — நா.அருமைநாயகம் | 200 | 00 |
| — | இரவு | — இ.இராசேந்திரம் | 150 | 00 |
| 12ஆம் | தீர்த்தம் | — க.சிவராசா | 1 5 | 00 |
| கொடியிறக்கல் | | கே.தியாகராசா | 150 | 00 |
| | | | 3215 | 00 |

## இல. 3 பிரதிட்டை

தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்தில் சென்ற 1978ம் ஆண்டு ஆவணி மாதம் நடந்த தேர்த் திருவிழாவன்று நான் அங்கப்பிரதட்சணம் செய்யும் போது கோவிலுக்கு பணம் கட்டிய பின்பு அங்கு பிரதட்சணம் செய்யுமாறு நிர்வாக சபை வற்புறுத்தினர். என்ன செய்வதென்று அறியாமல் திகைத்து நிர்கும் பொழுது பக்கத்தில் நின்ற அறிந்த ஒருவர் அப்பணத்தை செலுததி அந்தப் பிறதட்சணம் செய்ய உதவினர் என்பதை அறியத்தருகிறேன்.

இப்படிக்கு
சு, ஜெகதீசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை இளைஞர் அருள் நெறி மன்றம் தெரிவிப்பது.

உ
சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

இறைவன் திருவருளுக்குரிய,
திருமிகு ஆசியர் ஐயா அவர்கட்கு
''சந்திரதீபம்'
கொக்குவில் மேற்கு'
கொக்குவில்.

இளைஞர் அருள்நெறி மன்றம்
திருஞானசம்பந்தன் வீதி
திருகோணமலை:
3.8.79.

## திருக்கேதீச்சரமும் திவ்வியஜீவனசங்கத்தினரும்

பேரன்பற் சிறந்த நமது ஐயா!

தங்களுக்கு எல்லா நன்மைகளும் பெருக இறைவன் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம். தாங்கள் முறையே தவறாது ஒழுங்காக நமக்கு அனுப்பிவரும் ''சந்திரதீபம்'' கிடைத்து வருகின்றது. சைவ உலகுக்கு ஒரு வெளியீடு இல்லையே (இலங்கை நாட்டில்) என்ற நமது ஏக்கம் தங்கள் அரும் பெரும் முயற்சியினால் வெளிவந்து கொண்டிருக்கும் ''சந்திரதீபம்'' நமதுஏக்கத்தையும் வருத்தத்தையும் தணித்துள்ளது அதனால் நாமட்டுமல்ல சைவ உலகமே பெருமையும் மகிழ்ச்சியும் அடையும. இதன் மூலம் நலமார்ந்த உணர்ச்சியும் எழுச்சியும் பெற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை. சந்திரதீபம் போல ஒரு எல்லைக்குட்பட்டு எல்லைமருவா நெறியோடு பணியாற்றும் வெளியீடு இங்கென்ன தமிழ் நாட்டில்கூடஇல்லைஎனலாம்.சைவநெறியில் வரம்புக்குட்பட்டு வஞ்சமனமற்று படிற்றொழுக்கமற்று தருமுறைநெறி நின்று பணியாற்றி யருளுகின்ற 'சந்திரதீபம்' செந்தமிழ்ச் சைவஉலகத்திற்குத் தங்கள் நற்பெரும் பணியினால் கிடைத்தமையையிட்டு இறைவன் திருவருளைச் சிந்தித்து வாழ்த்தி வணங்குவதுடன், மேன்மேலும் 'சந்திரதீபம' சீர்சால் சிறப்புக்களுடன் வெற்றி நடை போட்டு எங்கள் செந்தமிழ்ச் சைவசமுதாயத்தை நன்னெறிக்கு ஆற்றுப்படுத்தியும், திருமுறைநெறியினின்றும் பிறழாது தவறாது பணியாற்றிச் சிறந்து விளங்க வாழ்த்தி 'சந்திரதீபம்' நெறியைப் பேணுகின்றோம். நிற்க

சென்ற ஆடித் திங்கள் 4-ஆம் நாள் ( 0- 7- 79) வெள்ளிக் கிழமை வெளிவந்துள்ள 'சந்திரதீபம' ஆறும் பக்கத்தில் யாழ்ப்பாணம் திவ்யஜீவன சங்கத்தின் அறிக்கை ஒற்றினைப் படித்தோம். நாமனைவரும் சைவமக்களே என்பதில் ஐயமில்லை. நமக்கென ஒரு மரபுவழி வழிபாட்டு முறையுண்டு. அந்தவகையில் திருமுறைகள் நெறிநின்று திருமுறை மரபினின்றும் தடம்புரளாது வழிபாடு ஆற்றுவதும் திருமுறையாசிரியப் பெருங்கருணையாளர்களாகிய சிவபக்தசிகாமணிகளின் நெறி நின்று நமது அருள்மிகு இறைவன திருககோயில்களில் வழிபாடு செய்வதும் மற்றும் நமது உடனபிறந்தோர்கள் போன்று வாழும் சைவ சமயத்தவர்களை திருமுறைகள் நெறி நின்று வழிபாடாற்றச் செய்தருளுவதும் நமது சைவமரபுக்கு உடன்பாடே. இக்காலத்தில் புற்றீசல்கள் போன்று வெளிவரும் பகதிப்பாடல்களும் பாடுபவர்களின் வாழ்வு நிலைக்கும் நமது சைவசமய நாயன்மார்கள் திருமுறையாசிரியர்கள் அருளிய திருப்பாடல்களுக்கும் அவர்களின் வாழ்வு நிலைக்கும் ஏராளமான வேறுபாடும் மாறுபாடும் உண்டு. திருமுறையாசிரியர்களின் மனநிலைக்கும் இக்காலப் பக்திபாடல்கள் பாடுகின்ற வர்களின் மனநிலைக்கும் உள்ள வேறுபாட்டுக்கும் நிறைய வேற்றுமையுண்டு. திருமுறையாசிரியர்களின் நிறைமொழிகளே திருமுறை அருட்பாடல்கள். அவர்கள தமது உடல் பொருள ஆவி அனைத்தையும் இறைவன் திருவடித்தாமரைகளில் ஒப்பித்து 'எனதுரை நின் உரையாக' என்ற தெய்வீக அருள்நிலையில் திருமுறைகளை அருளினார்கள்— பாடினார்கள். ஏன்? மனித வாழ்வுக்காகச்— செந்தமிழினத்தின் எல்லைமருவா உயர்நெறி...வாழ்வுநெறி உயர்ந்து விளங்க வேண்டும், உலகசமுதாயம் ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன் வாழ்வின்பங்கள அனைத்தும் முறையே நெறி தவறாமல் பெற்று சிறந்தினிதுவாழ வேணடுமென்ற அவர்களின் ஒரே திருவுள்ளம்தான நமக்காகத் திருமுறைகளைப் பாடியருளினார்கள் என்பதிலும் பார்க்க விண்ணப்பித்தருளினார்கள். என்றால் நலமல்லவா? ஆனால் இன்றைய நிலையில் பக்திப்பாடல்கள் பாடும் கர்த்தாக்கள் நிறைய நிறைய இருக்கின்றார்கள். ஆனால் இவர்கள் நமது சைவமரபின் சிறப்பினை உணரவேண்டும். உலகத்தில் பெருஞ்சமயஙகளாகிய புத்தசமயம் இஸ்லாம் சமயம் கிறிஸ்த்தவசமயம் ஆகியனவற்றுக்கு என ஒரு மரபு வழியுண்டு. அவ்வழியே தவறாது தடம்புரளாது நின்று இறைவனுக்குத் தமது நன்றியறிதலாகிய கருணைமிகு வழிபாட்டினை ஒப்புக்கொடுத்து மகிழ்கின்றனர். ஆனால் எங்கள் சைவமரபுவழி நின்று வழிபாடு செய்த நிலை இன்று மாறி ஆத்மீக வழிபாடு மாறி இக்காலத்தில் ஆள் வழிபாடு இவர்களின் ஆணவமுனைப்பில் தற்புகழ்ச்சியின் மடியில் வீண் வறண்ட தற்பெருமை யென்கின்ற புறத்தே தெருப்பாட்டாக சந்தைப் பாட்டாக விளம்பரம் செய்யும் வியாபாரச் சமடமாக நினைந்து இக்காலத்தவர்கள் வழிபாடாற்றுகின்ற இழி நிலையை இறைபக்தியை உண்மைநெறி நின்று வஞ்சனமற்று படிற்றொழுக்கம் அற்று வழிபாடு செய்கின்ற திருக்கூட்டம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டாது என்பது உறுதி.

ஒருநாமம் ஒருருவரும் ஒன்றுமிலாத இறைவனுக்கு ஆயிரம் திருநாமம் பாடி வழிபடும் நிலைபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. வழிபடுவதில் ஆட்சேபம் இல்லை. ஆயினும் ஆயிரம், திருநாமம் நிறை மொழியார் மொழிந்திட்ட திருநாமமாக இருபபதுதான் சிறப்பு. ஆனால் இக்காலத்தில் சினிமாவிலும் வானொலிகளிலும், தலைசிறந்த கச்சேரி மேடைகளிலும்தான் பக்திப்பாடல்கள் பாடப்படுகின்றது. அவை யெல்லாம் ஆயிரம் திருநாமத்துக்குரியவைஆகமாட்டா. காரணம் அவை நிறை மொழியார் மலர்ந்திட்ட நிறைமொழியல்லவே. இன்று வியாபாரச் சிந்தையுடன்...குறிக்கோளுடன் பாடப்படும் பாடல்களை யெல்லாம், ஆயிரம்திருநாம வரிசையில் சேர்ப்பதா? இன்றைய சனநாயக உரிமையில், சனநாயகத்தில் ஒரு சனநாயக மன்னன் (அதாவது இன்று எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்தானே?) சினிமாப் பாடல்களும் நிறைமொழிதான் என்று எண்ணிக்கை அதிகத்தில் கேட்டால் அதை அனுமதிப்பதா? இவற்றையெல்லாம் சிந்திக்க வேண்டும். உலகப்பெருஞ்சமயங்களெனக் கருதப்படும், இஸ்லாம், புத்தம், கிறிஸ்த்தவம் ஆகிய சமயங்கள் அனைத்துமே பண்டையமரபுவழி தமது வழிபாடுகளை நடாத்துகின்றனர். இஸ்லாம் சமயத்தில் முகம்மது நபிகள்நாயகம் அவர்களே வழிகாட்டும் ஞானி.. குருமுதல்வர். அவர்கள் அருளிய புனிதமிகு குர்ஆன் அவர்களின் மறைநூல். கிறிஸ்த்து சமயத்தில் இயேசு கிறிஸ்த்து பெருமானே வழிகாட்டும் குருமுதல்வர் புனிதபைபிள் அவர்களின் மறைநூல். புத்தசமயத்தில் போதிமாதவன் புத்தபெருமானே குருமுதல்வர். தம்மபதம் திரிபீடகம் அவர்களின் முதல் மறைநூல். மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி அவர்கள் சமயத்தில அவர்கள் கடைப்பிடித்தொழுகும் மரபுவழிக் கட்டுப்பாடும் ஒழுங்கும் ஆத்மீகத் துறையிலாவது நமது சமயவாவில் இல்லை. யாரும் நமது செந்தமிழ்ச்சைவ சமுதாயத்தில் கடை விரிக்கலாம். அக்கடையில் எதுதான் வியாபாரம் நடந்தாலும் எல்லாமே வாங்கிக்கட்டிவிடுவார்கள் நம்மவர்கள். ஆனால், சுண்டிப்பார்த்து வாங்கும் பழக்கம் இல்லை. அதேபோன்று இஸ்லாம், கிறிஸ்த்தவம், பௌத்தம் ஆகிய சமயங்களில் வாலாட்ட முடியாத பஞ்சோறதகள் பலர் செந்தமிழ்ச்சைவ சமுதாயத்தில் தாமும் சைவசமயத்துக்கு உடன்பாடுள்ளவன்தான். தாமும் ஒரு 'இந்து' என்று சொல்லிக் கொண்டு நமது இதயங்கள் வெடிக்கும் அளவுக்கு நமது சமுதாயத்தில் மோசடிகளும், வியாபாரங்களும் செப்படிவித்தைகளும் மாயாயாலங்களும் நடாத்தி நமது சமுதாயவாழ்வையும் ஆத்மீகச் சிறப்பையும், செந்தமிழ்ச்சைவ மரபுவழி ஒழுக்கவழக்கங்களையும் சீரழித்துச் சிதைக்கின்றனர். இச்சிதைவுக்கு ஏராளமானவர்கள் பலியாகின்றனர் — பலியாக்கிக் கொண்டு வருகின்றனர் —பலியாகத் தயாரகவும் உள்ளனர். இந்த இழி நிலைகளுக்கெல்லாம் யார் காரணம்? வேறு சமயத்தவர்களா? வேறு சமுதாயத்தர்களா அல்லது வேறு மொழியினரா? இல்லை, இல்லை நாமேதான் செந்தமிழ்சைவ சமுதாயத்தவர்.என்பதை யாரும் மறுக்க முடியுமா?இன்றையநிலையில் பேஷன் எனறதொரு போலித்தனம் வெகுவாக மனித சமுதாயத்தைச் சிரழித்து வருகினறது. முக்கியமாக தமிழினத்தையும் மோசமான நிலையில் சீரழிந்துளளது சீரழித்து வருகின்றது. இநத அழிவுக்கு செந்தமிழர் சமுதாயம பலியாகக் கொணடேவருகின்றது. இது மனிதனின் வளர்ச்சிக்கும் தார்மீக வாழ்வுக்கும் குழிதோணடப்பட்டு வருகின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதேபோல நமது மேன்மையான ஆத்மிக அதாவது சமய வாழ்வும் ஒருவித பேஷன அடிப்படையில்தான் இப்பொழுது எங்கள் செந்தமிழ்ச்சைவ சமுதாயத்தில் செயல்பட்டு வருகின்றது; அத்தமுறையில் தான் இன்று பக்திப்பாடல் அனைத்தும் சுயநலம், தற்பெருமை உள்ளத்தின்வழி ஆணவம தற்புகழ்ச்சி என்ற தடம்புரண்ட நெறியில் நடைபெறுகினறது. இக்காலத்தில் நாமாவளி பாடுகின்றவர்கள் அனைவரும் சைவசமயத்தவாகள் தானே? ஏன் இவர்கள் சைவமரபுவழி அமைந்துள்ள திருமுறையாசிரியப் பெருமக்களின் திருப்பாடல்களை தமது வழிபாட்டுக்குப் பயன்படுததக்கூடாது என்று கேட்கின்றோம். பகதியின தெய்வீகப்பண்பும் கருணையும், நெஞ்சத்தைக் கனிவிக்கும இறைநிலயும். திருமுறைகளில் இல்லையா? திருமுறையாசிரியப் பெருமக்களான அடியார்களான காலத்தில் இருந்த தெய்வீகச் சூழ்நிலையிலமைந்த திருப்பாடல்கள் அனைத்தும் வேறறுவிகார மில்லாத அருள்நிலையிலமைந்தது.இன்று வேற்றுவிகாரத்தின் உச்சநிலயில் தடுமாறும் பக்தாகளின் ஒருவிதப பகட்டுததான் இககாலத்தில் எழுந்துள்ள — எழுந்துவரும் பாடலகளும் பஜனாவளி நாமாவளிகளும் எனபதில் ஐயமிலலை. இந்த நிலயில் அவைமையில் அருள்மிகு திருக்கேதீச்சரம் திருக்கோயில் வழிபாட்டுககுச் சென்ற அடியவாகள் திருமுறைப் பாடல்கள அல்லாத பாடலகளைப் பாடுவதறகு அனுமதி வழஙகாமல் மறித்த செயல் வரவேற்கததக்கதே, திருக்கோயில அறங்காவலர் குழுச செயலாளர் சிவத்திரு, நமசிவாயம ஐயா அவாகள அஞ்சா நெஞ்சத்துடன இதன் விடயத்தில் சிறப்பாகவும் கண்டிப்பாகவும் நடந்து கொணடமையிட்டு நாம் நமது நன்றியையும் வாழததுக்களையும் ''சந்திரதீபம்'' வாயிலாகத் தெரிவித்துக் கொள்கினறோம, அத்துடன் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்யத தமிழ்நாட்டிலிருநது(கோயம்புததூரிலிருந்து) இங்குசென்ற நான்கு மாதங்களுக்கு முனபு வருகைதநதவர்கள் அருள்மிகு திருக்கேதீச்சரம் ஆலயத்தில் திருமுறைப் பாடலகள் அல்லாதவற்றைப் பாட அனுமதிக்கப் படவில்லை என்பதையும் நாம் அறிந்தோம். அதேபோன்ற திவ்யஜிவன சங்கத்தினருக்கும் அனுமதி மறுக்கப்பட்டதில் அதிசயமில்லை. இனிமேலாவது அருள்மிகு திருக்கேதீச்சரம் சென்று வழிபடுவார்கள் திருமுறை நெறிககு அமைநது சிறந்து விளங்கி செந்தமிழ்ச சைவ உலகுக்கும் சிறப்பாக உலக மனித சமுதாயத்திற்கும் தெய்வீக நலம் அளிதருளுகின்ற திருக்கோயில் அறங்காவலர் குழுவின் ஒழுங்கு விதிகளுககு அமைந்து வழிபாடாற்று வதுதான் சிறப்பு என்பதை பணிவன்புடன் தெரிவித்துத் தாழ்மையுடன வேண்டிக் கொள்கின்றோம்.

இலங்கையில் திருமுறை பாடலபெறற திருத்தலங்கள் இரண்டேயிரண்டுதான். அந்த நிலையில் அருள்மிகு திருக்கேதீச்சரம் உண்மையில் திருமுறையில் மரபுவழி அமைந்து விளங்குகின்றது. அதற்குகந்தமுறையில் ஆலயத்தின் அறங்காவலர் குழுவுக்குச் செயலாளராக விளங்கும் சிவத்திரு. நமசிவாயம் ஐயா அவர்களினதும் அவர்களுடன் அமைநதுவிளங்கும் அறங்காவலர் குழு அன்பர்களினதும் நற்பெரும் முயற்சிகளினால் அருள்மிகு திருககேதீச்சரம் மட்டுமே திருமுறை மரபுவழி நின்று பெருமையுடன் தெய்வசாந்நித்தியத்துடன் திருவருட்பெருங்கருணையை வழங்கிச் செந்தமிழ்சைவ உலகுக்கும் சிறப்பாக உலக மனிதசமுதாயத்துக்கே அருள்வழி காட்டியருளுகின்றது. இந்த தெய்வசாந்நித்தியமான அருள் நிலையைப் பயன்படுத்தி ஆலயத்தின் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு வழிபாடாற்றி அருளமிகு திருக்கேதீச்சரப் பெருமானின் திருவருட்பெருங்கருணைக்கு ஆட்பட்டுய்யுமாறு அனைவரையும் தாழ்மையுடன் திருவருட் குறிப்புடன் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

சிவ சிவ
திருச்சிற்றம்பலம்
வாழ்க உலகெலாம்
வணக்கம்

இவ்வண்ணம்
தங்கள் பணிவன்புள்ள
அடியேன்
இ. சண்முகராசா
மன்றச்செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாழும் நிலையில் உள்ள சைவநீதியை மேன்மையாக்கலே நமது நோக்கம்.

## பொய்த் தவம் பேணும் பிரசாரகர், தன் தருமம் உணராத அந்தணர்கள், கோயிலை தம்சொத்தாக்க வழிதேடும் திருப்பணிச் சபையாரும் பாழாக்கி விட்ட எம் சைவ சமயத்தை மேல்நிலைப் படுத்தும் நம் முயற்சி பாழாகாது!

சந்திரதீபம் எழுதும் எந்த ஒரு வார்த்தையும் சிவசம்பந்தமாகின்றதே அன்றி அவச்செயலை ஆதரிப்பதாக ஒரு காலமும் அது இராது. எமது நோக்கம் சைவ நெறிதழைத்திட வகுக்கப்பட்ட உண்மை நெறிக்குரிய தவ வாழ்க்கையை உலகிற்கு சுட்டிக் காண்பிப்பதே அன்றி வேறு எதுவுமே இல்லை. உண்மை என்றும் அழியாது. கொலை செய்யப் பட்டாலும் உண்மை அழியாது என்பது என் மன உறுதி. நாங்கள் இந்த மக்களிடை ஏதாகிலும் ஒரு பலாத்காரச் செயலை மேற்கொள்ளும் படி தூண்டிட பத்திரிகை நடத்த வில்லை. எம் நோக்கம் சைவத்தின் உண்மையை எடுத்துரைத்தலே! ஒரு சைவன் உண்மையை உணர்ந்தால் ஆரியம் (வடமொழி) தமிழ் (தென் மொழி) இரண்டையும் தனது மெய்ப் பயனுக்கு உதவும் மொழியாக ஏற்பான். அதோடு எல்லா உலக மொழிகளையும் நிந்திக்கான். இன மத வேறு பாடு கருத்துக்கள் பற்றி அவன் சிந்தியான். ஆனால் பொய்மையான தவ வாழ்க்கை உடையாரை அவன் தவறு என்று சொல்லி அவர் சொல் பழுது என உலகறியச் சொல்வதற்கு அஞ்சான்.

திருஞான சம்பந்த சுவாமிகள்; சைவ நெறி பொய் தவம் பேணப் படுவாரால் தவறான வழியில் இழுபட்டுப் போகுங்கால் தமது பதிகம் ஒவ்வொன்றிலும் பொய்த்தவ வாழ்வுடைய சமணர் புத்தருடைய மொழிகளைக் கேளாதீர். அவை பழி பெருக்குவன; துயர் உறுத்துவன அவர் வழிகள் வன் செயல்களான பொய்யான கபடம் கொலை களவு இவற்றுடன் கலந்துள்ளன என்பதை மிகு உறுதியாகச் சொல்லிக் கொண்டார். இதை அவர் ஒவ்வொரு தலத்தையும் சென்று பாடும் பொழுது தாம் பாடும் ஒவ்வொரு பதிகத்திலும் தெளிவு படுத்துகின்றார்; ஏன் சொல்லுகின்றார்? சமணரை வெல்ல வேண்டும் என்ற ஆசையா? அல்லது சைவம் சிறந்தது என்று நிலை நாட்டும் சமயப் பற்றா? இவை யாதுமே அவரிடத்து இல்லை! இவை இருந்தால் அவர் ஓர் ஞானி ஆகார். ஆனால் இவை சொல்ல வேண்டிவந்ததன் நோக்கம் உலகமக்கள் பிழையான வழி சென்றிடும் போது அவர்களை நன் நெறிப்பட வைத்தல் ஓர் அறிவாளியின் கடமை ஆதலின் அவற்றைச் செய்திட வேண்டி வந்தது.

இந்த உண்மைகளை எல்லாம் கூரிய அறிவுடையாரால் உணரலாமே அன்றி மந்த புத்தி உடையாரால் உணர்த்தல் அரிது. சைவ நெறியில் கூர்மையான அறிவை உண்மை வழிக் கொள்கையால் பெறலாமே அன்றி மிலேச்சரது நெறி சொர்க்கம் என உணரும் பேதைகட்கு விளங்கவே விளங்காது.

இந்த நிலையில் இன்று மிலேச்சரது நெறியை அறவே கண்டித்தவர் கொழும்புத்துறை யோக சுவாமிகள். அவர் ஒருவரைத் தான் என் வாழ்வில் தவ நெறியில் உயர்ந்த உத்தமராக நான் காணக்கூடியதாக இருந்தது. அவரது தூயதுறவு அகிம்சை என்னும் கொள்கையில் நின்றது. ஆனால் அவர் பேசிடும் பேச்சுக்கள் சில காலங்களில் இவர் என்ன இப்படி ஏசுகிறர் என்று நாம் நினைக்கலாம்; ஆனால் 20ம் நூற்றுண்டில் ஒவ்வொரு மனிதனுடைய சித்தத்தையும் அவை தீயவழியில் இழுபட்டுப் போகும் முறைகளையும் உணர்ந்து அவரை ஏசி எவருடைய சித்தத்தையும் மாற்றி உண்மை வழிக்கு திசை திருப்பிடக் கூடிய ஓர் ஆத்மிக பெலத்தைக் கொண்டவராக இருந்தார்.

தூயதுறவின் சிறப்பும் தூய பிரமச்சரிய நைட்டிக விதரத்தால் என்னேரமும் ஒளிமயமான திருக் கண்களும் கம்பீரமும் துயர் அறியாத சிந்தையும் பேரானந்தமயமான அறிவும்தன்னைக் மட்டு மல்லாது தன் அன்பரது சிந்தையின் தடு மாற்றங்களையும் உடைத் தெறியும் கடும் வார்த்தையும் அச்சம் அறியாத கொள்கையும் வெள்ளை நிற ஆடையும் சிவன் என்பதன்றி ஏதும் உணராத பேரருளின் ஞானமும் அவரை அண்டிச் செல்வார் எவரது சிந்தையில் திகிலையோ கவலையையோ மாற்றி உறுதிகாட்டி நன்நெறிப் படுத்தும் படி அக்கோலமே அமையும்.

அடியேன் வாழ்வில் தவறிடாத படி தோன்றாத் துணையாகி நின்று காத்தருளும் புண்ணிய உருவம் அதுவேயாம். அவரிடம் உண்மை அன்பு கொண்டார் எவரிடமும் அவரது கொள்கையான அகிம்சை அன்பு கபடமிலாத சொற்கள் நன் நெறியாவும் காணப்பட வேண்டும். அதைப் பெற முடியாதவர்கள் அங்கு அன்புடையார் இல்லை, அவர் அன்பு பொய்யானது. அவர் தமது குடும்ப விருத்தியின் நலனுக்காக சுவாமிகளை அண்டிக்கொண்டார் என்றே நாம் உறுதிபடச் சொல்வோம்.

சுவாமிகள் அடிக்கடி சொல்வது கூட இருக்கிற கடவுளை விடுத்து ஏன் ஓடித் திரிகின்றாய், அவரைத் தேடிப்பார். நிச்சயம் தென்படும். சும்மா தேட முடியாது தவம் செய். உண்மையாக நட. ஒழுங்குதான் காணும் பெரிது. ஒழுங்காய் நடவும். வீண்வார்த்தை பேசாதே வீணரோடு திரியாதே உனக்கு சுமத்தப் பட்ட பணியைச் ஒழுங்காச் செய்வது தவம் என்றார்.

அன்று சுவாமி இதை ஏன் சொன்னார் என எண்ணிஇருந்தேன். தாப்பட்ட பணி என்ன உத்தியோகம். அது என்னை விட்டு தானாக விலகிக் கொண்டது. நான் விரும்பா திருந்தாலும் அது விரும்பி என்னை விட்டகன்றது. அதன் பின் பணி விளங்கியது: சிவனுக்கு தொண்டு செய்ய வேண்டும் என்ற அவா தலைப் பட்டது: தொண்டுகள் புரியும் வாய்ப்புகள் வந்தன. கூசாது முயன்றேன். இன்று அது தவமாக மாறுகின்றது.

நாம் சில உண்மைகளை உலகறியச் சொல்லும் போது உண்மையிலாத பலர்க்கு அவை வேதனையாக இருக்கலாம். அவர்கள் என்னைப் பற்றி எவ்வளவோ புறம் சொல்லலாம். எனக்கு அவை பற்றி அக்கறை இல்லை. ஏனெனில் பிறருடைய புகழ்ச்சி இகழ்சி பற்றி நான் சிந்திக்கப் போறவன் அன்று. நான் சிந்திப்ப தென்றால் நான் தவறான வழி நடந்திடக் கூடாது. என்னை வடிவாக வைத்துக் கொள்ள வேண்டும்.

நான் ஓர் பிரசங்கி அல்ல. பாட்டுக் கச்சேரி அல்ல: தம்பிரான் அல்ல. ஏதும் ஒரு பட்டம் உடையவன் அல்ல. ஓர் அரசியல் வாதி அன்று. அரச பதவிக்கும் ஆசையுடையவன் அன்று. நான் ஓர் திருத்தத்தை உலகில் சொல்ல வந்தவன் என்று கூட என்னை எண்ணப் போறவன் அன்று.

என்னையும் எல்லா உயிரையும் படைத்த இறைவன் படைத்தனன்; ஏற்றம் வந்தால் தாழ்வு வரும் தாழ்வு வந்தால் ஏற்றம் வரும். இன்று இவற்றை யோகசுவாமிகள் அருட் பார்வை பெற்ற பின் அடியேன் நானாக நன்கு உணர்ந்தேன். ஆதலால் யார்க்குமே எக்காலமும் ஒரு தீங்கும் நேர வேண்டும் மென்று எண்ணாத எனக்கு தீங்குவரக் காரணமில்லை. யோகசுவாமிகள் ஏதும் நற் செயல் செய்ய கூசாதே! ஆரையும் போய் அது செய்யட்டோ எனக் கேளாதே! நல்லது செய்யும்போது உனக்கு எல்லாம் விளங்கும். நான் தோன்றாத் துணை என்று வேடிக்கை போல் குழந்தைகளுடன் பெரியோர் பேசுவது போல் பேசினார்; பின்னரும் என்னை நோக்கி உண்மையாக நீ நடந்தால் உலகத்திற்கு நீ பயப்பட வேடிண்யதில்லை. ஆனால் உண்மையிலாது நடந்தால் தான் உலகித்துப் பயப்பட வேண்டும் என்றார். பின்னரும் என்னை நோக்கி நீ இப்போது ஒரு குழந்தை (அப்பொழுது எனக்கு 34 வயதிருக்கும் நான் வயது போனவன் கிழவன். கண்டபடி அலட்டிறன், நீயும் என்னைப் போல்வந்தால் பிறகு அலட்டுவாய். நானும் சென்று சென்று அணுவாய் தேயுறன், நீயும் தேய்வாய் என இப்படி பல பல வார்த்தைகள் சொல்வார். அன்றெல்லாம் அவை வேடிக்கை விளையாட்டு மொழிகள் என எண்ணி இருந்தேன். அன்று விதித்தவிதி இன்று தனது விளையாடலைச் செய்கிறது. நான் என் செய்யலாம், பெரியோரை இதைத் தங்கள் சிந்தையில் கொண்டால் இந்த யாழ்ப்பாணத்தற்கு நன்மை தானாக வரும்,

# மெய்கண்டார் ஆதினம் தெரிவிப்பது.

## அந்தணர் நிலை

சைவ சமய அமைப்பில் வர்ணத்தாலோ ஒழுக்கத்தாலோ சாத்திர வல்லமையாலோ வேதமோதுதலிலோ ஆலயங்களில் பிரதிஷ்டை முதல் நித்திய பூசை வரை பொறுப்புடையராயோ பிதிர் கடன்களை திர்த்து வைப்பதினாலோ மனித குலத்துக்கு யாக மூலம் தேவர்களை அழைத்து வேண்டிய நிதிகளைப் பெறுவதிலோ சமயம் அநதணர்க்கு முதலிடம் வழங்கியுற்றதை அந்தணர் மரபு மறுத்துரைக்க மாட்டார்கள் என்பது உண்மை. அவர்களுக்கு ஆறு தொழில் விதிக்கப்பட்டுள்து. வேதியர் என்றும் அந்தணர் என்றும் ஆசாரியர் என்றும் குருக்கள் என்றும் இன்னும் பல புலைபெயராலும் சமயம் மதித்து வருகிறது. அத்துடன் அளுக்குகர்தாதவனமாக இலவசமாக பல துறைகளிலும் செல்வங்களை வாரி வாரி வழங்கியும் வருகிறது. அதை விட ஆசாரிய தெட்சணை என்றும் குரு தெட்சணை என்றும் வழங்கி வருகிறது. இதற்கு இவர்கள் வழங்கி வருகிற கைம்மாறு என்ன? சமய சாஸ்த்திரம் என்ன சொல்லுகிறது? ஆலய அமைப்பில் பிராமணறகு சமயம் கொடுத்த இடம் பூநூல் போட்டது. இருபிறப்பாளர் பார் பார் என்று காட்டவும் அதனால் பிரமத்துடன் தொடர்புடையர் என்னும் வித்தையால் வித்தியாதத்துவத்திலிருப்பவர்களென்றும் கீழேயுற்ற மனிதர்கள் ஆன்மதத்துவத்திலிருப்பவர்கள் என்றும் சிவதத்துவத்திலுற்ற திருவருளை வித்தியாதத்துவத்திலுற்ற அந்தணரே இவர்கள் ஈயும் பிரசாதப் பொருட்களை நிவேதனமாகக் கொடுத்து அதன் பயனாக திருவருளை சகல பாக்கியங்களையும் பெற்றுக் கொடுப்பவர்கள் இவர்கள் என்று சமய சாஸ்த்திரம் கூறுகிறது. அதன் படி அவர்கள் வித்தையால் வித்தியாதத்துவமாகிய சூட்சும பூமிக்கு யோக முறையால் பாவனை மூறையால் செல்லும் யோக்கியரை யுடையோரே செல்வர்கள். அல்லாதவர்கள் சிவ பூமியை பெற்று இறைவனிடம் திருவருள் பெற்றுத்தராமல் மேற்குறித்த பதவிகளையோ தானங்களையோ ஏற்பது அழகல்ல என்பலதைப் பிராமணர் சமுதாயம் ஏற்றுக் கொண்டு தன சமயம் இருக்கும் பிராமணர் பரிதாபநிலைக்கும். அவலப்படும் ஆலய நிர்வாக பரிதாப நிலைகளையும் திருந்தக் கூடிய சூழ் நிலையையும் அந்தணரும் ஏனையோரும் சைவ சமய ஸ்தாபனங்களும் குருக்கள்மார் சபையும் இணைந்து எதிர் காலத்தில் ஆலய நிர்வாகம் சமய சம்பந்தமான சடங்குகள் யாவும் ஒருதலைமைப் பீடத்தின் கீழ் அமைய வேண்டிய முறையில் கலாச்சார அரசசபையுடனும் கலந்து ஒரு தலைமைப் பீடத்தை உருவாக்க வேண்டும். ஏனைய சமயங்களுக்கு தலைமைப் பீடமுண்டு. ஏன்சைவசமயத்திற்கு தலைமைப் பீடமிருக்கவில்லை? தலைமைப் பீடமென்ற முறையிலே தான் இந்துமா மன்றம துவங்கியது. நாளடைவில் தகுதிக்குறைவால் முதன்மைபெற்று விளங்க முடியவில்லை. ஏனைய சபைகளும் அவ்வாறே உலகக் கேள்விகளுக்கு மறு மொழி சொல்ல சமய அறிவு இல்லாமல் மறைந்து போயின. ஆனபடியால் இப்படியே வாழா இருப்பின் சமயம் என்னவாகும்? சமயத்தின் பேரால் ஏராளமான சொத்துகளும் பணமும் இருந்தும் படித்தவாகள முன்வராத படியாலும் அப்படி முன் வரினும் கௌரவமான அரச பதவியிலுள்ளோர் இன்று பதவிகளை அனேகமாக பெறவிரும்பினதாலும் இன்று சமய ஸ்தாபனங்ள் இயங்காமல் கிடக்கின்றது. பதவி மோகமும் சமய வளர்ச்சிக்கு இடைஞ்சலாக இருக்கிறது; இன்றைக்கிருக்கும் சமய வீழ்ச்சிக்கு சந்திர தீபம் உணர்ச்சியையூட்டி அறியாமையைப் போக்கி அறிவுக்கு இடமழிப்பதால் சந்திரதீபத்தை மெய்கண்டார் ஆதீனம் ஆதரிக்கிறது. சந்திரதீபத்தால் கூடிய சீக்கிரம் சமூகத்தில் சமயம் உணர்ச்சி உண்டாகுமென்று எண்ணுகிறோம், அதனால் சந்திர தீபம் நிலை பெற்று விளங்க வேண்டுமென்று ஸ்ரீமத் ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகள் பூரண ஆசியும் வழங்குகிறது.

சுபம் இங்ஙனம்

மெய்கண்டார் ஆதினம் தம்பிரான் சுவாமிகள்

(30 6 79) ஆனந்தபவான் காரைநகர்

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கில் இருக்கும் [illegible] விரிவுரையாளர் திரு. வை. நல்லையா அவர்களால்
இலங்கைமணி சைவநூற்பதிப்பகத்தில் பிரதிபண்ணப்பட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org